

தனிச்சுற்றுக்கு மட்டும்

# காற்றுவெளி

● வைகாசி - 2025

கலை இலக்கிய இதழ்

# காற்றுவெளி

**கலை இலக்கிய இதழ்**

வைகாசி - 2025

படைப்புக்கள் அனுப்ப :
Mullaiamuthan1954@hotmail.com
mahendran1954@hotmail.com

படைப்புகளின் கருத்துக்களுக்கு
படைப்பாளர்களே பொறுப்பு.

- ஆசிரியர் : சோபா
- வடிவமைப்பு : நெகிழன்
- நூல் அனுப்ப :
  R.Mahendran,
  34,Redriffe Road, Plaistow, Londan E13 0JX, Uk
- வருட சந்தா : 12.00 பவுண்ட்
- வங்கி இலக்கம் :
  R.Mahendran,
  A/C No : 90759821
  Sort.Code : 20-67-88,
  SWIFTBIC BUKBGB22
  IBAN GB80 BUKB 2067 8890 7598 21
  BARCLAYS BANK (PLAISTOW BRANCH)


**வணக்கம்,**

யாவரும் நலமா?

வைகாசி மாத இதழுடன் சந்திக்கிறோம்.

தொடர்ந்து படைப்புகளை அனுப்பி ஆதரவு தரும் படைப்பாளர்களை நன்றியுடன் நினைவுகூருகிறோம்.

சந்தா, அன்பளிப்பு, விளம்பரம் எதுவுமின்றி தொடர்ச்சியாக வெளியிட்டுவருகிறோம். நிறுத்திவிட நினைக்கும்போதெல்லாம் படைப்பாளர்களின் படைப்புக்கள் நம்மை நெகிழ்ச்சியுறச் செய்கின்றன. வாசகர்கள் புரிந்துகொள்வார்கள் என நம்புகிறோம்.

அச்சில் அவ்வப்போது கொண்டுவரும் முயலும் போதெல்லாம் பலரின் கருத்து... இணையத்தில் வாசிக்கலாமே.. புலம்பெயர் நாடுகளில் இலவசம் தானே.. திமிரில் தானே வெளியிடுகிறீர்கள். ஆதலினால் சந்தா, அன்பளிப்பு எதுவும் கொடுத்துவிடாதீர்கள் என சொல்பவர்கள்தான் தங்களுக்கு, தங்கள் ஆய்விற்கு, தங்கள் நூலகத்திற்கு எனக் கேட்டு வந்து நிற்கிறார்கள். யாவற்றையும் கடந்து போகிறோம்.

இப்படிப் பலர் பாதையில் அவ்வப்போது குறுக்கிடவே செய்கிறார்கள். எனினும் இதுவரை கடந்து வந்துவிட்டோம்.

சிற்றிதழ்கள் பற்றிய தெளிவான பார்வை எமக்குண்டு.. தொடர்ந்து பயணிப்போம்.

காற்றுவெளி விரைவில் இங்கிலாந்து படைப்பளர்களின் சிறுகதைகளின் தொகுப்பொன்றை வெளியிடவுள்ளோம். விபரங்கள் காற்றுவெளியில் பிரசுரமாகும்.

உலகில் அச்சுறுத்தும் யுத்தங்கள், நோய்களின் பயமுறுத்தல்கள் யாவற்றிலும் மக்களே பலியாகின்ற கொடுமைகள் தொடர்கின்றன. சுதந்திரமாகவும், நம்பிக்கையுடனும் மக்கள் தங்கள் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய வாழ்வை வாழ காற்றுவெளியுடன் நாமும் பிரார்த்திப்போம்.

நம்பிக்கையுடன்,

***சோபா***

*01/05/2025*

# படைப்பாளர்கள்

**கவிதைகள்**

1. கோபால்தாசன்
2. கவிஜி
3. நற்பவி மணிபாலா
4. ஸ்ரீவாரி மஞ்சு
5. மீ.யூசுப் ஜாகிர்
6. ச. இராஜ்குமார்
7. சுத்தமல்லி உமாஹரிஹரன்
8. பிரான்சிஸ் திமோதிஸ்
9. வில்வரசன்
10. கண்ணன் விஸ்வகாந்தி
11. வெ.தமிழ்க்கனல்
12. அ.ஈடித் ரேனா
13. பாவலர் கருமலைத்தமிழாழன்
14. க. புனிதன்
15. சா. கா. பாரதி ராஜா
16. கி.கவியரசன்
17. ஐ.தர்மசிங்
18. மு.முபாரக்
19. வட்டக்கச்சி வினோத்
20. கவிஞர்.இரா.சீ.பாலகுமார்.M.A.
21. நேசன் மகதி
22. ஆ.தமிழரசி
23. இனியவன்காளிதாஸ்
24. ரகுநாத் வ
25. ரஜிதா அரிச்சந்திரன்
26. இளையவன் சிவா
27. மைத்திரிஅன்பு
28. இரா.வெங்கடேஸ் குமார்

**சிறுகதைகள்**

1. கார்குழலி
2. ஜெனனி.மோ
3. இரா.மதிராஜ்

**திரைப்படப்பிரதி**

1. கே.எஸ்.சுதாகர் (அவுஸ்திரேலியா)

**கட்டுரைகள்**

1. திரு.சமயக்கண்ணு, மதுரை
2. அ.கிரேஸி மேரி

● கோபால்தாசன், சென்னை

# என் வீடு என் உலகம்



இது வீடல்ல
என் சிந்தனையின்
பிரசவக் கூடம்

சில
கருத்தும்
கருத்தற்றதுமான
தர்க்கங்களுக்கு
இதுவே சிறப்பு நீதிமன்றம்

ஆளுமையின்
அழுத்தமானது
கிளைகளாய்ப் பிரிந்து
படைப்பில் மலரும்

வெடிக்கும் கோபமும்
துடிக்கும் வார்த்தைகளையும்
அடக்கும் பிரதிநிதிகள்
எழுத்துகள்தாம்

சில நேரங்களில்
அக்கம் பக்கத்து
வீடுகளின் சண்டைகள்
எண்ணங்களுக்கு
அறுவை சிகிச்சை செய்யும்

நானமரும்
இருக்கை ஓர் அரசனின் அரியணைப் போன்று;
பிரகடனப் படுத்தும்
எழுத்துகள் உலகிற்கொரு
புதிய செய்தி அல்லது அனுபவம்

எனது
மேசையின் மேலே இருந்த
காகிதமும் எழுதுகோலின்
இருப்பிடத்தினில் இப்போது கணினி

என்னிருக்கையின்
வலதுபுற புத்தக ரேக்கினில்
மலையாள மொழிபெயர்ப்பு
ரஷ்ய வங்காள இலக்கியம்
மற்றும்
நவீன களப் போராளிகளின்
வரலாறுகளும் கைக்கு வர ஏதுவாய்

என்னையும்
எழுத்தையும் சாணைப் பிடிக்கும்
கருவியாய் நிசப்தம்

சில சலனங்கள்
போகும் போக்கில்
ஒரு கருத்துக் கருவை
எறிந்துவிட்டுச் செல்லும்
பல நாழிகைக்கும் நாட்களுக்கும்
போதுமான தீனியாய்

மொட்டைமாடி
என்பது காலையும் மாலையும்
திறந்த வானம் எனக்களிக்கும்
கவிதைக் கொடை

வீட்டின்
சாளரங்கள்
வாசல் கதவுகள் எல்லாமே
என்னுடைய காவலர்கள்

வீட்டினுள் பாம்பென
ஊர்ந்து படரும்
காலை கதிரொளியோ
இரவு நிலவொளியோ
அஃதின்றி ஓரணுவும் அசையா

வீட்டின்
முன்னே பின்னே
முளைக்கும் பாத்திரங்கள் மற்றும்
மிக்சியின் சப்தங்களை
அரணாய் தடுத்து காக்கிறது சிந்தனை

இதில்
எனது மூச்சுக் காற்றும்
பேச்சும் சிரிப்பும்
நான்கு சுவர்களின்
உள் பக்கங்களில் மோதி
கரைகிறது

ஒரு மின்விளக்கு
ஒரு மின்விசிறியில்
எழுத்துப் பட்டறையானது
இயங்குகிறது

ஆனாலும்
அறுநூறு அல்லது நானூறு
சதுர அடிகள் கொண்ட வீடு தராத சுதந்திரத்தை
வேறேது தரும்?

கவிஜி

## சுய கருணை ஜுவாலை

தேடலற்ற கண்களில்
தேங்கிய கோலி குண்டு
சுழல மறுக்கும் சுகம் அதில்
அப்படி என்ன தான் யோசிப்பானோ
காதல் தோல்வியோ
சுய கருணை ஜுவாலையோ
ஒன்றுக்கும் விளக்கம் இல்லை
கிறுக்கனுக்கு வேலையில்லை
அடிக்கடி சொல்வது தான்
சாக போறானாம் சாக
சென்ட் போட்டுகிட்டு
அசட்டை செய்தாலும்
சிரிக்கிறவன் தானே
சிரித்தான்
வாங்கிய கடலை மிட்டாய்
ரெண்டையும்
வாய்க்குள் திணித்துக் கொண்டான்
புலம்பலின் வழியே
நிச்சலனத்தைக் கைக்
கொள்கிறவன்
நேரத்தை நிறுத்திப் பார்த்து
விறுவிறுவென வீடு சென்றான்
சற்றைக்கெல்லாம்
தியானம் விட்டது போல
அந்த முன் மதியம்
தேகம் விட தொடங்கியிருந்தது...!

❍

நற்பவி மணிபாலா

## வெற்றியை உனதாக்கு...

இடி மின்னல் மிரட்டும் வானில்/
இன்னிசை தண்ணிசை வண்ணம் வரைகிறது,/
வானவில் வளரி.. கத்தும் கடலும்/
கரிக்கும் உப்பும் அறியாது, துப்பும்/
நிலவாய் முத்தைத் துப்பும், சிப்பி/
பொன் கொள் முயற்சியாய், கண்/
பொறி உறை வெறி, கனவது/
நனவென, கடிதினில் வெளிப்பட, உறைபனி/
என பாதை மறைத்திடும் தடை/
பகையதை உதையதிட்டு, வெற்றியை உனதாக்கு,/
வியர்வை விதையிட்டு. நீர் தேடும்/
வேராய், வேர் ஈர்க்கும் நீராய்,/
பார் போற்றும் பேர் வாங்க,/
வெற்றியை உனதாக்கு... ஆன்றோர் சான்றோர்/
போன்றோர் புகழ, பெற்றோர் மற்றோர்/
உற்றார் உயர்ந்தோர் வாழ்த்த, நானிலம்/
மாநிலம் பூநிலம் செழிக்க, உயர்/
சிந்தனை ஜெயிக்க, சிந்தை நிறை/
தந்தை மனம் களிக்க, விரோதியும்/
வாழ்த்த, விஸ்வரூப வெற்றியை உனதாக்கு,/
கற்றதெல்லாம் காசாக, காசெல்லாம் கல்வியாக,/
பெற்றதெல்லாம் நற்பேராக, பேச்செல்லாம் வாள்/
வீச்சாக, தமிழ் மூச்சாக, வானுயர்/
வெற்றியை உனதாக்கு, வேட்கைதனைத்
தெளிவாக்கு.../

❍

# ஸ்ரீவாரி மஞ்சு கவிதைகள்

சுள்ளிகளையிட்டு
தணலாக்கி
குளிர்காய்ந்து
மன இடுக்கை அணைத்துவிட்டு
சென்றவர்களை....

செரிக்காத நினைவுகளாய்
தொண்டைக் குழிக்குள்
விரலைத் தீண்டியாவதும்
வாந்தியாக்கி வெளியேற்றி விடுவதுண்டு.....

அர்த்தமே இல்லாத
எழுத்துகளை கோர்த்தெழுதிய
கவிதைகளாய்....
மிகுந்து
கனம் கூடிப்போன புத்தக பைகளை....
தூக்கிச் சுமப்பதுமுண்டு....

இப்படியாகத்தான்.....

நெடு நாட்களுக்கு முன்பு
சந்தித்த பறவையொன்று இப்போது
என் மொட்டை மாடியில் கூக்கிடுகிறது.........
மனமதிர
கதவை தட்டுவது யாரென
திறந்து பார்க்கப் போவதில்லை
முன்பு செய்ததைப் போல்....
தட்டியதில் ரத்தம் வடியும்
அவர்கள் கைகளைக்
காண முயலப் போவதில்லை.....

சுழன்றடிக்கும் நீரோட்டமாய்
பொங்கியெழும் அலைகளின்
வேகமெதிர்த்து நீந்த கற்றுக்கொண்டேன்...

சமுத்திரக் கரையிலிருந்து
கூவியழைப்பதால்....
மீன் கிட்டுமென நினைகிறார்கள்
துள்ளி மறுகரையில்
நீந்திக்கொண்டிருப்பதை
அறியாமல்....

ஆழ்கடலின் ஆழத்திலும்
எல்லை வகுக்கிறான்
தகப்பன்....
எல்லைக்குள்ளேயே நீந்தென....

எல்லையை தாண்டி
கடலின் பரப்பை தீண்டிடும்
இச்சையில்...
எல்லைக் கோடுகள் காணாமல் போனது
மகளிடம்....

தூண்டிலை
துரோக தேசமாக்கி காட்டியது
தகப்பன்....
மிதக்கும் தக்கையை முட்டாளாக்கி தவ்வியது
மகள்......

பரந்து விரிந்த
தன் தேசத்தின் எல்லையை
முத்தமிட துடித்தது மகள்...
பல குஞ்சுகள் சூழ....
மகள் வலம் வர காண
துடித்தது தகப்பன்....

கரையில் தலை தூக்கி ரசிக்கும் மீன் மகளை...
சுற்றி சுற்றி வட்டமிட்டது தகப்பன்மீன்....

கடற்கரையில்
ஈர மணல்
கோபுரத்தில்.....
விண்ணைத் தொடும்
ராக்கெட் செய்து கொண்டிருக்கிறாள்
ஜில்லென்ற கனவில் மகள்....
அலைமோதும் அலையை
அடி வயிறு சுல்லுனு
பசிப்பது போல்
ஆழமாய் வெறித்துக்
கொண்டிருக்கும்....
அந்த தகப்பனுக்கும்
மகளுக்கும்...
அந்த மீன்களின் சாயல்.......

● மீ.யூசுப் ஜாகிர்

உண்மையின் சரணாலயம்
நோக்கி
பயணிக்கிறார்கள்..,
பொய்களால்
வாழ்வையிழந்தவர்கள்.

அமைதியாய் பொய்களை
நம்பும் சிலருக்கு..,
உண்மையின் மீது தான்
ஆயிரம் சந்தேகம்.

கண்மூடித்தனமாக பொய்களின்
காலைப்பிடித்துக் கொண்டு,
அலட்சியமாக
உண்மையை காற்றில்
தொலைத்து விடுகிறார்கள்.

காலம் தாண்டி, ஓட்டமும்,ஆட்டமும்
குறைய நேர்கையில்,
உண்மையை அறிய ஆவலும்,
அவசியமும் நேர்கிறது..,
உண்மையை நோக்கி பயணிக்கையில் பொய்களால்
இழந்த எல்லாமே வலிகளையும், கண்ணீரையும்
கொடுக்கும்.

பொய் வாழ விடாது.,
உண்மை சாக விடாது..,
இப்போதெல்லாம்
உண்மை சாகடிக்கிறது,
பொய் வாழவிடுகிறது..!!!

● ச. இராஜ்குமார், திருப்பத்தூர் மாவட்டம்

# மனிதனின் கடைசி குரல்

மௌனமான உலகில், நான் தனித்து நிற்கிறேன்
ஒரு இனம் கவிழ்க்கப்பட்டதன் இறுதி சொல் அது
வெற்றுத் தெருக்களில் சுழன்று கொண்டிருக்கிறது
காற்று
நினைவுகளின் எதிரொலிகள்,
சிரிப்பு மட்டும் பின்வாங்கல்கள்

வாழ்ந்து நேசித்த அனைவருக்காகவும் நான்
பேசுகிறேன்
மேலே உள்ள ஒரு உலகத்தால் மௌனமாக்கப்பட்ட
அவர்களின் குரல்கள்
வெற்றிடத்தில் தொலைந்து போன அவர்களின்
கனவுகள்
மற்றும் நம்பிக்கைகள்
நான் இருக்கும் நிலையிலிருந்து வெளியேறுகிறது
கடைசி குரல்

என் வார்த்தைகள் தொலைந்து போனதற்கு ஒரு
சான்றாகும்
எப்படியாவது மனிதகுலத்திற்கான ஒரு இரங்கல்
நான் சொர்க்கத்திற்கு செல்ல ஏதுவாய் ஒரு சொல்.

யாறுமற்ற இடத்தில் எனது குரல் கம்பீரமாய்
ஒலிக்கும்
மலையுச்சியிலிருந்து நான் ஆரவாரத்துடன்
கத்துவேன்
எனது கடைசி குரல், அந்த
பள்ளத்தாக்குகளில் எதிரொலித்துக்
கொண்டேயிருக்கும்..

# மது

கார்குழலி (திருமதி சிவசங்கரி)



அந்திசாயும் நேரம் ஓட்டமும் நடையுமாக வீட்டை நோக்கி போய்க் கொண்டிருந்தாள் கிருஷ்ணவேணி. அவள் முன் நெற்றியில் வகிடிற்கு இரண்டு பக்கமும் இருந்த நரைமுடிகள் அவள் வயது நாற்பத்தைந்துக்கு மேல் இருக்கும் என்பதை நமக்கு உணர்த்தியது. வழியில் இவளைப் பார்த்த பங்கஜம்,

“என்ன வேணி உன் மகளும் மருமகனும் வந்திருக்கிறாக போல, இப்ப என்ன கேக்க வந்திருக்கானோ? போ போ என்னைக்கு உனக்கு விடிவு காலமோ” என்று அலுத்துக்கொண்டாள்.

கிருஷ்ணவேணி பதிலொன்றும் சொல்லாமல் வீட்டைநோக்கி விரைந்தாள். வீட்டை நெருங்கும் போதே மனசெல்லாம் பட படவென அடித்துக் கொண்டது. புருஷன் செத்து 15 ஆண்டுகள் ஆகிவிட்டது. கல்யாணமாகி ஐந்து ஆண்டுகள் ஆகியிருந்த நிலையில் குடிப்பழக்கத்துக்கு அடிமையான அவள் கணவன் மஞ்சக்காமாலை வந்து போய்ச் சேர்ந்து விட்டான். கையில் ஒரு குழந்தையும் வயிற்றில் ஒரு குழந்தையுமாக நிர்க்கதியாக நின்ற அவளுக்கு அவள் மட்டுமே துணை. பிறந்த வீட்டிலும் எந்த ஆதரவும் இல்லாததால், தன் குழந்தைகளை வளர்க்க பக்கத்திலிருந்த அரிசி மில்லில் வேலை பார்த்து வயிற்றைக் கழுவினாள். பிள்ளைகள் பெரிதாக வருமானம் பத்தாததால் இடையிடையே காட்டு வேலைக்கும் சென்றாள்.

மூத்தவள் மல்லி அவளுக்குத் திருமணமாகி மூன்று ஆண்டுகள் ஆன நிலையில் 30 தடவையாவது மூக்கைச் சீந்திக் கொண்டு வந்திருப்பாள். நல்ல இடமென்று புரோக்கர் சொன்னதை நம்பி மகளைக் கட்டிக் கொடுத்தாள். அவனும் ஒரு அலுவலகத்தில் பியூனாக வேலை பார்த்தான். ஆயினும் அந்தப் பாழாய்ப் போன குடிப்பழக்கம் அவனையும் விடவில்லை. அடிக்கொருதரம் உன் அம்மாவிடம் அதுவேண்டும், இதுவேண்டும் வாங்கி வா என அடித்து அனுப்பி விடுவான். இப்பொழுது அவனும் சேர்ந்து வந்துள்ளான். என்ன விசயமாக இருக்கும் என எண்ணிக்கொண்டே வீட்டிற்கு வந்த அவள் வாசலில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்த மருமகனைப் பார்த்து,

“வாங்க மாப்ள, எப்ப வந்தீங்க? நல்லாருக்கீங்களா? வீட்ல எல்லோரும் எப்படி இருக்காங்க?” என்று கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தாள். அவளை ஏறிட்டுப் பார்த்த கதிரேசன்,

“ம்..ம்..இருக்கட்டும் எல்லாம் நல்லாருக்காங்க”

என்றான் தெனாவெட்டான பார்வையோடு. உள்ளே சென்ற கிருஷ்ணவேணியைப் பார்த்ததும் மூலையில் அழுதபடி உட்கார்ந்திருந்த மல்லி முகத்தைத் திருப்பிக் கொண்டாள். பக்கத்தில் அழுதுகொண்டிருந்த அவளின் இரண்டு வயது மகனைத் தூக்கிக் கொண்ட வேணி பேரனைக் கொஞ்சியபடி,

“என்ன சாமி பசிக்குதாப்பா இரு பாட்டி பாலாத்தித் தாரேன்”

என்று அடுப்பங்கரைக்குள் சென்று இருந்த பாலில் தண்ணி கலந்து குழந்தைக்கும் மீதமிருப்பதை இருவருக்கும் காப்பி போட்டு எடுத்து வந்தாள். அப்பொழுது வீட்டிற்குள் நுழைந்த மகன் சேகரை,

“எங்கடா ஊர்சுத்த போன வீடு தங்காத” என்று கடுமையான குரலில் திட்டிவிட்டு,

“இந்தா குழந்தைய எங்கனா வெளில கொண்டுபோயி அழுகைய அமத்து”

என்று அவன் கையில் திணித்தாள். சேகர் பத்தாம் வகுப்புவரை படித்துவிட்டு பத்தாம் வகுப்பில் பெயில் ஆனதால், வெட்டியாக ஊரைச்சுற்றிக் கொண்டிருந்தான். இதில் வேண்டாத சேர்க்கை வேறு. அவ்வப்போது தம் அடித்து வேணியிடம் மாட்டிக்கொண்டு அடியும் வாங்குவான். அவன் சென்ற பின்பு மெதுவாக மல்லியிடம் சென்று பேச்சை ஆரம்பித்தாள்.

“இப்ப என்னாச்சுடி” என்று கேட்டதுதான் தாமதம் மடைதிறந்த வெள்ளமாய் மல்லி புலம்பி அழ ஆரம்பித்தாள்.

“நா என்னத்தச் சொல்ல இவர் குடியினால இருந்த ஒரு வேலையும் போச்சு எனக்குன்னு பாத்து கட்டி வச்சுருக்கியே. இதுக்கு என்ன நீ பாழுங்கிணத்துல தள்ளியிருக்கலாம்” என ஓவெனக் கதறியழுதாள். இதைக்கேட்ட வேணிக்கு மயக்கமே வரும்போல இருந்தது.

“இப்ப என்ன பண்ணலாம்னு இருக்கீங்க”

என்றதும் இதற்காகவே காத்துக்கொண்டு இருந்ததுபோல் அங்கே வந்த கதிரேசன்,

“அதான் அத்த ஒரு மளிகைக்கடை வைக்கலாம்னு இருக்கோம். நீங்க கொஞ்சம் பண உதவி செஞ்சா போதும்”

என்று அசடு வழிந்தான். இதைக்கேட்ட கிருஷ்ணவேணிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. மல்லி திருமணத்திற்காக இருந்த ஒரு காரை வீட்டையும் அடமானம் வைத்துவிட்டாள். அந்தக் கடனையே இன்னும் கட்டாத நிலையில் இனி எதை வைத்துக் கொடுப்பாள். இந்தக் குடிப்பழக்கத்தினால் எத்தனை குடி கெடப்போகிறதோ என்று தன் நிலையை எண்ணி மனம் வெதும்பினாள்.

சுத்தமல்லி உமாஹரிஹரன், திருநெல்வேலி

# பொருநையும் திருநெல்வேலியும்


*தென்பொதிகை மலை தோன்றி தவழ்ந்து வந்த நதியே !*
*தென்னை வாழை நெல் வளர உதவிடும் தாயே!*
*உன்னைப் பற்றி என்னை எழுத வைத்தது நீயே!*
*பொருநை என்ற பெயருக்குப் பொருத்தம் ஆனாயே!*

*பாபநாசம் அம்பை சேரை வழியாகவே*
*பாதை சமைத்து வந்த நதித்தாயே!*
*மனிதன் செய்யும் அழுக்கை எல்லாம்*
*மனங் கோணாமல் சுமந்து வந்தாயே!*

*பொங்கும் அலையுடன் ஆர்ப்பரித்துத் திரிவாயே!*
*சங்கே முழங்கென்று முழங்கும்*
*திருவாயே!*
*தங்கு தடையின்றி தாவித்தாவி*
*வருவாயே!*
*உன்னை அடைத்து விற்பவனுக்கு*
*வருவாயே!*

*வெண்மேகம் சூல் கொண்டு மழையாக*
*உறைவாயே!*
*கண்காண நெல் விளைந்து மகசூல்*
*தருவாயே!*
*வான் மழையைப் பொருத்து அணையில்*
*நிறைவாயே!*
*நெல்வேலி பெருமை உலகில் உரைக்கும்*
*திருவாயே!*

*கருணையும் பொருநையும் பிரிக்கவே முடியாது!*
*உலகில் எந்த நதியும் பொருநைக்கு*
*ஈடாகாது!*
*நெல்லையில் நிலவும் அடையாளம்*
*வேறேது?!*
*பொருநையைப் புகழும் போது வாய்*
*மூடாது!*



# வாழ்க்கைப் பாடங்களை உணர்த்தும் சுந்தரிமணியனின் ‘நீறு பூத்த நெருப்பு’ – சிறுகதை ஒரு பார்வை

திரு.சமயக்கண்ணு, மதுரை

"**நீ**று பூத்த நெருப்பு" ஆம்! அழகான தலைப்பைக் கொண்ட....சிறு கதை!

அதே நேரம் இன்றைய சில கல்லூரி மாணவர்களின் அல்லல் சூழல்... அவல நிலையைச் சித்தரித்துக் காட்டும் சிறப்புமிகு சிறுகதையும் இது! என்றால் மிகையன்று!

மதிவதனி கல்லூரி செல்லும் முன்பு சமையல் வேலை முடிக்க வேண்டும், பின்பு குளிக்க வேண்டும். குளித்து முடித்தவுடன், எந்த வகைக் காட்டன் சேலையை அணிவது பொருத்தம் ஆக இருக்கும் என்று ஆலோசித்து அதற்கு ஏற்ப ஒரு காட்டன் சேலையை தயாராய் எடுத்துவைத்துக் கொண்ட பிறகு குளிக்கச் சென்றாள். ஏனோ? அன்று அவள் அந்த வேலைகளுக்கிடையே சிறிது பரபரப்பாகக் காணப்பட்டாள்.

கல்லூரிக்குத் தாமதமின்றிச் செல்லவேண்டும் என்ற ஆர்வமும் கொள்கையும் ஒரு பக்கம் அவளை அவசரப்படுத்தியதில் உண்மை இல்லாமல் இல்லை...

இதன் மூலம் நடப்பிலுள்ள நல்ல ஆசிரியை ஒருவரின் துடிப்பு எப்படி இருக்கவேண்டும் என்று ஆசிரியர் படம் பிடித்துக்காட்டுகிறார்.

மதிவதனிக்கு சுமார் முப்பத்தைந்து வயது தான். ஆனால் மற்றவர் பார்வைக்கு அவள் வயது இருப்பத்தைந்துக்குள் தான் இருக்கும் என்றே நினைக்கத் தோன்றும்.

அவள் பயணம் செய்யும் கல்லூரி பஸ் சற்று நேரத்தில் வந்து விட்டது. பஸ்ஸில் ஏறி அமர்ந்த அவளுக்கு கடந்த கால நினைவலைகள் ஒன்றன் பின் ஒன்றாய் தோன்றி மறைந்து கொண்டே இருந்தன. விரைவில் கல்லூரி வளாகம் சென்று விட்டாள்.

அங்கே இந்த ஆண்டு இளங்கலை பயில வந்த மாணவர்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வத்தில் குழுமி இருந்த மாணவக் கண்மணிகளிடம் உரையாடினாள். மாணவர் ஒவ்வொருவரும் தத்தம் அறிமுக விபரங்கள் பற்றிக் கூச்சம் குழப்பமின்றிப் பேச வேண்டும் என்று அறிவுரை கூறினாள்.

அப்படி அவர்தம் கோரிக்கையை ஏற்று...

அறிமுகப் பேச்சுக்கு ஆஜராகிய மாணவர்களில் மணிமாறனும் ஒருவன்...

பேச எழுந்த மணிமாறன், "டீச்சர்" என்று கூறியதுமே கேலியும் கூச்சலும் உணர்ச்சிபூர்வமாய்....மகிழ்ச்சி ததும்ப...அந்த வகுப்பு வாளாகத்தின் மேற்கூரையையே முட்டி எதிரொலித்தது!

இந்த நிலையை ஒரு கட்டுக்குள் கொணர விரும்பினாள்...மதிவதனி.

எனவே உடனே ஒரு உத்தரவு போட்டாள்.

"இனிமேல் தன்னை 'டீச்சர்' என்று யாரும் அழைக்க வேண்டாம்...

மாறாக 'அம்மா' என்றோ.. அல்லது 'மேடம்' என்றோ தான் அழைக்கவேண்டும் என்பதே அந்த உத்தரவு அறிவுரை.

அவள் வகுப்பெடுக்கும் திறன் பற்றி.... மணிமாறன் விமர்சனம் சூப்பராய் செய்வதுண்டு. அம்மாவின் பேச்சு ''தீபாவளிச் சீனிச் சரவெடி போல் வெடிக்கிறீங்க'' என்று புகழ்வான்.

அவனது கிராம நடைப் பேச்சும், கபடமில்லாத் தூய்மை உள்ளமும் மதிவதனி மனதைப் பெரிதும் கவர்ந்தன. இங்கே ஆசிரியர் எப்படிப்பட்ட மாணவனாய் ஒருவன் இருத்தல் அவசியம் என்று அனைவருக்கும் பட்டும் படாமல் பாடமாய்க் கூறுவது மிகவும் குறிப்பிடத்தக்கது.

ஒரு நாள் வகுப்பில் மாணவன் மணிமாறன் தூங்கி விழுந்ததைக் கண்ட ஆசிரியை, சற்று கோப உணர்ச்சி பொங்க, தூங்கி விழுந்த மாணவன் மணிமாறன் தலையில், தான் வைத்திருந்த புத்தகத்தைத் 'தொப்' என்று போட்டாள். மாணவன் அதிர்ச்சியில் எழுந்ததும் சுதாரித்துக்கொண்டு,

'' சாரி மேடம். இரவு வேலைக்குப் போனதால் என்னையும் அறியாது தூங்கி விட்டேன்''என்றான்.

''ஏன் இரவுவேலைக்குச் சென்றாய்? இரவு வேலை பார்த்துவிட்டு படிப்பது எப்படி? கல்லூரிக்கு வருவதெப்படி... இது..... யாராலும் முடியாதன்றோ'' என்றாள்.

அதற்குப் பதிலளித்த மாணவன்...

''வேறு வழியில்லை மேடம். வேலைக்குச் சென்று தான் படிக்கவேண்டும்''என்பதே என் நிலைப்பாடு என்றான். அவனுக்குப் பக்கத்தில் இருந்த அமர்ந்திருந்த சக மாணவனிடம் அவள் விசாரித்த போது,

''ஆம் மேம் மணிமாறன் தந்தை கூட சமீபத்தில் இறந்து போய் விட்டார்''

எனவே ஒட்டுமொத்த குடுப்பப் பொறுப்பும் அவன் தலை மேல் வந்து விழுந்து விட்டது என்ற போது, மதிவதனிக்கு அவளறியாது ஓர் ஈகையும் இரக்கமும் அவளை ஆட்கொண்டது. அவன் மேல் ஒரு கட்டுக்கடங்கா கரிசனம் பாய்ந்தது.

அப்போது அவள் இளமையில் படித்தது ஒன்று நினைவுக்கு வந்தது. ஆம் பெரியவர்கள் சொன்னது எல்லாம் முற்றிலும் உண்மையே.

அதாவது ''தாயோடு சீர் போகும். தந்தையோடு கல்வி போகும்'' என்ற முதுமொழி எவ்வளவு பொருள் பொதிந்துள்ளது என்பதறிந்து வியப்பாள். மணிமாறன் விஷயத்தில் அந்த முதுமொழி முற்றிலும் சரியே என்று யூகித்து மேலும் விசனம் அடைந்தாள்.

இங்கே ஆசிரியர் எழுத்தறிவிப்பவன் இறைவன் என்பதற்கு ஏற்ப...

ஓர் ஆசிரியை ஒரு மாணவனின் பின்புலம் என்ன என்பதை அறிதலும் புரிதலும் எவ்வளவு அவசியம் என்பதைச் சுட்டிக்காட்டுகிறார் என்பதை அறிய முடிகிறது...

மற்றும் ஒருநாள் ஆசிரியையின் கெட்ட கனவு காரணமாக கல்லூரிக்குக் காலதாமதம் இல்லாது சென்றடைந்தாள். கல்லூரி ஸ்டாப் ரூமில் ஒரே நிசப்தம்!

மேத்ஸ் மேடம் ஒன்றைக் கூறினாள்..

''மேடம் உங்களுக்கு விசயம் ஒன்று தெரியுமா? மணிமாறன் சென்னையில் இருந்து மதுரைக்கு ரயில் பயணம் மேற்கொண்ட போது, படியில் அமர்ந்து பயணித்து இருக்கிறான். எப்படியோ தூக்கத்தில் அவன் கீழே விழுந்து இறந்து விட்டானாம். அவன் கீழே விழுந்து குற்றுயிரும்.. குலையுயிருமாய் துடித்து இறந்ததைக் கூட அவனோடு பயணித்த மாணவர்கள் எவரும் அறியாராம்''

இங்கே ஆசிரியர், ஒருவரது பயணம் முறையாகச் செம்மையாக இருக்க வேண்டும் என்றும்... அதை விடுத்துப் படிக்கட்டில் அமர்ந்து பயணித்ததால் ஒருவன் உயிரே போய் விட்டதை அருமையாக விளக்குகிறார் என்பது நினைவு கொள்ள வேண்டியது.

மேலும் ஆசிரியர் மனதில் ரொம்ப ஆழமாகப் பதிந்த சுவடுகளையும் அவர் சோகமாக எடுத்துக்காட்டத் தவறவில்லை.

அதாவது டீச்சர் என்று அழைக்கும் பிற மாணவனைப் பார்க்கும் போதும், வகுப்பில் தூங்கி விழும் மாணவனைப் பார்க்கும்போதும், சின்ன வயசிலே குடும்பச் சுமைகளில் தாக்குண்டு கற்க முடியாது கஷ்டப்பட்டு இருக்கிற மாணவர்களைப் பார்க்கும்போதும் மதிவதனிக்கு மடிந்து போன மணிமாறன் முகமே முன் வந்து பளிச்சிடும்.

அவனது முதலாம் ஆண்டு நினைவு நாளில் கூட காலத்தால் காலன் கொண்டு போன அந்த இளங்குமரனின் நினைவு எப்போதும் வெளிப்பார்வையில் நீறு பூத்து இருப்பினும் உள்ளத்தில் அந்த நீறுக்குக் கீழே தகத் தக என்று அழியாது அமராது இருக்கும் நெருப்புப் போல் மணிமாறனின் நினைவுச் சிரிப்பு மலர் மதிவதனியின் நெஞ்சத்தைத் நாளும் தொட்டுத் தொடராமல் இல்லை.

அந்த நினைவலைகள் நீறு பூத்த நெருப்பாக உயிருடன் ஜொலித்தது!

ஆசிரியர் அவர்கள் மதிவதனி என்ற ஆசிரியையும்... பிஞ்சு வயதிலேயே தந்தையை இழந்து, நாளடைவில் ஒரு பயனும் வாழ்வில் கிட்டாது மடிந்து போன மாணவன் மணிமாறன் மூலமும், நமக்கு அறிவுறுத்திய மறக்க முடியா வாழ்க்கைப் பாடங்கள் முற்றிலும் சாலச் சிறந்தது.

❍

● பிரான்சிஸ் திமோதிஸ் (இலங்கை – மலைநாடு)

# கரியப்பொழுது

விஷக்காற்றை விழுங்குவதாயொரு
கனவினை காணத் தூண்டுமிந்த
கரிய பொழுதை
ஏன்.?
வெளிச்சமேற்றாது விட்டீர்கள்..!

அக்கரிய இரவின் தூண்டுதலின்று
இஸ்ரேலியரின் இதயத்துடிப்பைக்காட்டிலும் மிஞ்சுகிறது.

கண்ணீரை சிந்திய நமது கண்களும்
அவ்விரவின் மீதான அகோரப்பசியை கொழுத்தவுமில்லை.


ஓ... என் மலையடிவாரச்செடிகளே..!
முடக்குவாதமுற்ற மூளையின் பார்வையை
நீட்டி நிமிர்ந்து பாருங்கள்,

உங்கள் வெடித்தும் பிளந்த விரல்களின் மீது
ஒருவன்
அட்டைப்புழுவாகி வாழ்வதை எழுதுங்கள்.

கானான் தேசத்தை விழுங்கியக் காற்று
தேயிலை தேசத்தின் கழுத்தை நெரிப்பபை எழுதுங்கள்.

மண்ணுக்குள்ளிருந்து எழுந்து
மலையின் உச்சிக்கு நகருங்கள்,
அங்கொரு பாறையில் வேர்விட்டு
சூரியனைத் தொட்டு
இந்த கரியப்பொழுதை ஒளியூட்டுங்கள். ❍





# அலட்சியப் போக்கு ஏன்? எதற்கு? எப்படி?

● அ.கிரேஸி மேரி, திருச்சிராப்பள்ளி.

எல்லா விஷயங்களிலும் ஒரு அலட்சியப் போக்கைத் தற்கால பதின் பருவத்தினரிடம் கண்கூடாக காண முடிகிறது.

உணவில் ஆரம்பித்து... உடை அணிதல், சிகை திருத்தம், காலணி அணிதல் என எல்லாவற்றிலும் இயல்பான போக்கு என்பது அதிக குறைவு.

**சற்றே விசித்திரம்**

எதைக் கேட்டாலும் பதில் அளிக்க முற்படுவதில்லை.எந்தச் சூழலையும் எதிர்கொள்ள விரும்புவதும் இல்லை. தனக்கென ஒரு வட்டம் அதுவே உலகமென வாழும் இளம் பருவத்தினர் வாழ்க்கை சற்றே விசித்திரமாக தான் இருக்கிறது.

காலையிலிருந்து மாலை வரை வகுப்பறையில் கற்பிக்கப்படும் பாடங்களைக் காது கொடுத்து கேட்க எத்தனிப்பதில்லை. முதுகுத்தண்டை நேராக்கி உட்காருவதற்குக் கூட உடல் ஒத்துழைப்பது இல்லை. எவ்வித முன் தயாரிப்பும் அற்ற பதில்கள் நம்மை புறந்தள்ளுவது போன்ற நிலைக்கு உட்படுத்தும்.

**மீளுமா காலங்கள்**

மாலைப் பொழுதில் வீட்டிற்குச் சென்றதும் கணினியையும், அலைபேசியையும் பற்றிக் கொண்டு அதில் பாடம் படிப்பது போன்ற நாடகத்தை அரங்கேற்றுவர். படித்த பெற்றோரும், அக்கறை கொண்ட பெற்றோர்களும் எதை நம்புவது என்று கட்டாய சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

ஒரு முறைக்கு பலமுறை அழைத்த பிறகு சற்றே தலை நிமிரல் கொடுக்கும் குழந்தைகளை நாம் எவ்வாறு கையாள்வது ?

எண்பது, 90 களில் பெற்றோருடன் இவ்வளவு இணக்கத்துடன் இருந்தோமா என்பது கேள்விக்குறியாக இருந்தாலும், பெற்றோர்கள் மீது அதீத பக்தியும், பயம் கலந்த மரியாதையும் இருந்தது என்பது உண்மை.கூப்பிட நினைத்து நோக்கும் முன்பே என்னவென்று கேட்கும் குழந்தைகளை உருவாக்கும் காலங்கள் மீளுமா...?

**நம்பிக்கை இல்லை**

பெற்றோர்கள் கேள்வி எழுப்பினால் உங்களுக்கு அதெல்லாம் தெரியாது என்பதும் வகுப்பறையில் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் பாடப்பகுதியைச் சரியாகத்தான் சொல்கிறார்களா என்று யாரோ ஒருவர் பதிவேற்றம் செய்த காணொளிகளை வைத்து ஒப்பிடும் தற்கால சிறார்களின் சிந்தனையாக மாறிக் கொண்டுள்ளது.

முழுமையாக மாற்றம் செய்ய இயலாதவை என்பதே நிதர்சனம். குழந்தைகளுக்கு யார் மீதும் முழுமையான நம்பிக்கை இல்லை என்பது சற்றே சிந்தித்தால் கிடைக்கும். இதற்கு காரணமாக நமக்கு கிட்டுவது பெற்றோரின் அலட்சியப் போக்கு, குழந்தைகள் வளரும் சூழல், சந்திக்கும் மனிதர்கள், பயணிக்கும் தோழமைகள், ஊடகங்கள், திரைப்படங்கள் இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். மீட்டெடுக்கும் முயற்சி என்பது ஒரு நாளில் ஏற்படுத்தக் கூடியது அல்ல ஒரு வேளை அவ்வாறு ஏற்பட்டால் அது நிரந்தர தீர்வாக இருக்காது.

**அடையாளம் காட்டுவோம்**

பெற்றோர்கள், தாங்கள் கேட்ட கதைகளையும், வாழ்ந்த வளர்ந்த சூழல்களையும் குழந்தைகளுக்கு எடுத்துரைத்தல் வேண்டும். சிறு கவிதைகள், கட்டுரைகள் கதைகள், என வாசித்து


குழந்தைகளோடு கலந்துரையாட வேண்டும். தூரிகை பிடிக்க பழக்க வேண்டும்.ஆடல், பாடல்களில் ஆர்வம் உண்டாக்க வேண்டும். குழந்தைகள் பாடமாக கற்கும் விஷயங்களில் புரிதலை உண்டாக்க வேண்டும்.

ஆசிரியர்களின் மீது பெற்றோர்கள் முதலில் நம்பிக்கை வைத்து தன் குழந்தைகளை ஊக்கப்படுத்த வேண்டும்.

புத்தகத்தில் இருந்து மட்டும் குழந்தைகள் கற்றுக் கொள்வது இல்லை.மன முதிர்ச்சியை ஏற்படுத்தும் கட்டமைப்பை உருவாக்குவோம்; மாற்றியமைக்க முற்படுவோம்.

பொய்யான உலகங்களையும் மனிதர்களையும் வாழ்க்கையையும் அடையாளம் காட்டுவோம். நிஜ மனிதர்களையும் நிதர்சன உண்மைகளையும் வாசிக்க வழி காட்டுவோம். ஒரே நாளில் எதுவும் மாறிவிடாது. நம்மிலிருந்து மாற்றம் தொடங்கட்டுமே.

# வில்வரசன் கவிதைகள்



முற்றத்தில் மலர்ந்த
செவ்வரத்தம் பூக்களின்
ஈரம் காய்வதற்குள்
சித்தார்த்தன் வாழ்வைத் துறந்தான்.

உரோமங்கள் களைந்து
காவியுடையின் போர்வைக்குள் ஒடுங்கிய துறவற
விழிகளில்
யசோதரையின் கனவு
ஆவியாகிற்று.

போதிமரங்களின் கீழிருந்து
சாதுக்கள் எழுப்பிய சரண ஒலிகள்
சித்தார்த்தனின் செவிகளைக் குளிர்த்தின.
புதிய வழியொன்றை திறப்பித்த மகிழ்வில்
மூடிக்கொண்டான் விழிகளை.

ஆயினும் நினைவில்..?
வெண்குதிரையில் தப்பித்தோடும் சித்தார்த்தனை
துரத்திக்கொண்டேயிருந்தது
இராகுலனின் புன்னகை.

ஓ

நேற்றைக்கு
நண்பர்கள் கூட்டத்திலிருக்கும்
உன் புகைப்படம் காட்டி
இவன் தான் “அவன்” என்றேன்.

கண்களைக் கொஞ்சம் அகலமாக்கி
செல்போன் திரையை
மீண்டும் மீண்டும் தொட்டு உற்றுப்பார்த்த அம்மா
கலங்கிய கண்களுடன் சொன்னாள்
“கண்ணனைப் போல் “
இருக்கிறான் அல்லவா?

“கண்ணனை “
நீ அறிந்திருக்க இருக்கக்கூடும்
இருள் நாளொன்றில்
இராணுவம் அழைத்துப் போன
எம் மாமாவின் புகைப்படமாக

○

# கண்ணன் விஸ்வகாந்தி கவிதைகள்

இவருக்கு மட்டுமே பயப்படுகிறார்கள்
தலைமை ஆசிரியர் அறைக்கு வெளியே
காத்திருக்கும் சிறுவனாக
பயபக்தியுடன் கைகூப்பியபடி அனைவரும்
டெல்லி செல்லும் தொடர்வண்டியாய்
நீண்ட வரிசை
'அஞ்சு ரூபாய்க்கு ஒரு பேருக்குத் தான் அர்ச்சனை'
சுருக்குப் பையில் தேடிக் கிடைக்காமல்
முகம் வாடி நகரும் முதியவள்
அவமானத்தில் தலைகுனிந்தபடியே
அருள் பாலிக்கிறார்
சனி பகவான்


❧


வடம் பிடிப்பதற்காய்த்
தவமிருக்கும்
நிலை சேர்ந்த தேர்

❧

தண்ணீர் ஊற்றுகிறேன்
தினமும் ஊற்றுகிறேன்
மாதக்கணக்கில் ஊற்றுகிறேன்
பட்டுப்போன கொய்யா
துளிர்க்காதென
பாழாய்ப்போன மனசுக்கு
உறைக்கவில்லை இன்னும்

○





● வெ.தமிழ்க்கனல், ஆலங்குடி

# அய்யனாரின் மண் குதிரை

ஊர் சனம் புடைசூழ
கொம்புகள் ஊதி
தாரை தப்பட்டை முழங்க
பெரும் ஆராவாரத்தோடு நடந்த
குதிரையெடுப்புத் திருவிழாவின் முடிவில்
நடப்பட்ட மண் குதிரைகள் முன்பு
சிறு புல்லை நீட்டுகிறாள் ஒரு சிறுமி
இப்போது அன்பை

அசைபோடத் துவங்குகின்றன
அனேகக் குதிரைகளும்.

● அ.ஈடித் ரேனா

இருவருக்கும் இடையில்
சம்மனமிட்டு அமர்ந்திருந்தது
ஒரு அரூப இடைவெளி.

மனதுக்குள்
சுழன்று கொண்டிருந்த
சொற்களுக்கோ
இடைவெளியைத் தகர்க்கும்
துணிச்சல் இல்லை.

மௌனத்தின் இறுக்கம்
தாங்காத சொல் ஒன்று
கை கால் முளைத்து
தயக்கச் சுவர் தாண்டியது

முறிவைக் கொஞ்சம்
தள்ளிப்போட இதுவே
போதுமானதாக இருக்கிறது.

# புத்தாண்டுக் கொண்டாட்டம்

● ஜெனனி. மோ



சித்திரை மாதம். வானம் வெளுத்து இருந்தது. காற்றும் பலமாக வீசியது. காலநிலை அடிக்கடி மாறிய வண்ணம் உள்ளது. லதா படுக்கையை விட்டு எழுந்தாள். காலைக் கடன்களை முடித்துவிட்டு சுவாமி தரிசனம் செய்தாள். லதா இறைபக்தி உடையவள். வாசலில் அழகான வர்ணக் கோலம் போட்டு சமயலறைக்குச் சென்றவள் அடுப்பை பற்ற வைப்பதற்கு அரும்பாடுபட்டாள். *(36)*

தான் பணி புரியும் அலுவலகத்திற்குச் செல்லத் தயாராகி, அலுவலகப் பையைத் தூக்கிக் கொண்டு, தனது அறையில் இருந்த சுகந்தன் "லதா, உந்துருளிச் சாவியை எடுத்துக் கொண்டு வாங்க!" என்று அன்பாகக் கட்டளையிட்டான். *(23)*

லதா சமையலறையில், உணவுப் பொட்டலத்தில் மதிய உணவை எடுத்துக் கொண்டிருந்தாள். "கொஞ்சம் இருங்கோ சுகந்தன் எடுத்து தருகிறேன்" என்று சொல்லிக் கொண்டு, சுகந்தனது அறைக்கு வந்து, மேசையில் இருக்கின்ற உந்துருளிச் சாவியை எடுத்துக் கொடுத்தாள். சுகந்தனிடம் வந்து, வருகின்ற வாரம் புத்தாண்டுக் கொண்டாட்டம் வருகிறது. "அதற்கு குழந்தைகள் இருவருக்கும் புதிய ஆடை எடுக்க வேண்டும்" என்று கூறியபடி உணவுப் பெட்டலத்தையும் சாவியையும் அவனிடம் நீட்டினாள். *(46*

அவற்றை வாங்கிக் கொண்டு, அவளைப் பார்த்துப் புன்னகைத்தவாறு "சனிக்கிழமை எடுப்போம்" என்று புறப்பட்டான் சுகந்தன்.

"சரி சுகந்தன்" என்று முறுவலித்தாள் லதா.

வீட்டுக்குள் சென்று சமையலறையில் இருந்த, பாத்திரங்களை தூய்மைப்படுத்தினாள் லதா. பின்பு

படுக்கை அறைக்குள் வேகமாக நுழைந்தாள். கட்டிலில் பஞ்சு மெத்தையில், முயல் குட்டியைப் போல, படுத்துக் கிடந்த தனது குழந்தைகளை எழுப்பினாள்.

“குட்டிகளே எழும்புங்க!” *(41)*

குழந்தைகள், நித்திரை மயக்கத்தில் லதாவைப் பார்த்தன.

“அம்மா அம்மா அப்பா வந்து விட்டார்” என்று கத்தினான் சிறுவன் அபி. சுகந்தன் வீட்டிற்குள் நுழைந்தார்.

“வாங்க, இவ்வளவு தாமதம் ஏன் ?” என்றாள் லதா

“ நண்பன் சுதனின் மகளது முதலாவது பிறந்த தினம். அலுவலக ஊழியர்கள் எல்லோரும் சென்றோம். அதுதான் கொஞ்சம் நேரமாகிவிட்டது.” என்று கூறியபடி தனது அறைக்குச் சென்றான்.*(41)*

சில மணித்துளிகளின் பின்பு

“லதா, லதா” என்று மகிழ்ச்சியுடன் அழைத்தபடி சமையலறைக்குள்

நுழைந்தான் சுகந்தன்.

“என்னங்க,ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கின்றீர்கள்”

“ஆமாம் லதா, நாங்கள் நாளை குழந்தைகளுக்கு புத்தாடை எடுக்க போவோம்”

“அப்படியா சந்தோசம். உங்களுக்கு வேலை இல்லையா நாளை?”

“விடுமுறை கேட்டேன். கிடைத்துள்ளது”

“நான் ரொம்ப சந்தோசமாக இருக்கிறேன்.” என்றாள். *(37)*

மறுநாள் காலை புத்தாடை எடுக்கச் சென்றனர். தெருக்களிலும், வீடுகளிலும், புடைவையகங்களிலும் எங்கெங்கும் புத்தாண்டை எதிர்நோக்கும் மக்கள் கூட்டம் நிறைந்து வழிந்தது. *(15)*

லதா புத்தாண்டுக்கான இனிப்பு வகைகளை செய்வதில் முனைப்போடு ஈடுபட்டிருந்தாள்.

மறுநாள் காலை குளித்துவிட்டு, புத்தாடைகள் அணிந்து மகிழ்ச்சியோடு

புத்தாண்டைக் கொண்டாடிக் கொண்டிருந்தனர். *(16)*

புத்தாண்டு வந்து விட்டால் வீடே விழாக்கோலம் பூண்டு விடும். இன்னும் சிலமணி நேரங்களில் பிறக்கப் போகும் புத்தாண்டைக் கொண்டாடுவதற்காகத் சுகந்தனும் லதாவும் தங்களை ஆயத்தப் படுத்திக் கொண்டிருந்தனர். *(20)*

வீட்டு வாசலில் கலர் கோலங்கள் போட்டு சூரிய உதயத்திற்கு முன்பே மண் பானையில் பொங்கினாள். சுவாமிக்கு படைத்து விட்டு, இலை போட்டு சர்க்கரைப் பொங்கலை உண்டனர். *(18)*

“புது வருடம் பிறக்க இன்னும் பத்து நிமிடங்கள் கூட இல்லை..? பட்டாசுகளை எடுங்கள். வெடிக்க வைத்து பிள்ளைகளுக்கு காட்டுவம்..”என்றாள் லதா. *(18)*

சுகந்தனும் பட்டாசுகளுடன் தயாரானான்.

சக்கர வானம் வெடித்து குழந்தைகளுக்கு

மகிழ்வூட்டினான். குழந்தைகளும் சிரித்து மகிழ்ந்தனர். பட்சணங்கள், பட்டாசுகள் என்று புத்தாண்டு களைகட்டிய நேரம். *(17)*

“இன்றைக்கு எங்கே போறது”

“உங்களை நான் ஓர் இடத்திற்கு அழைத்துச் செல்லவுள்ளேன். தயாராகுங்கள்.” என்றான்.

முகம் முழுதும் பரந்த மகிழ்ச்சியோடு, புறப்பட தயாரானார்கள்.

“முச்சக்கர வண்டி ஒன்று வந்து நின்றது. அதில் நால்வரும் ஏறிச் சென்றனர்.”

முதலில் விநாயகரை வழிபட்டுவிட்டு பின்பு முச்சக்கர வண்டியில் ஏறி புறப்பட்டனர். *(34)*


முச்சக்கர வண்டி மேடு பள்ளம் நிறைந்த பாதையூடாக சென்றது. முப்பதுக்கும் மேற்பட்ட சிறுவர்கள் அடைக்கலம் தேடிய அன்னை இல்ல வாசலில் நின்றது. நால்வரும் இறங்கிச் சென்றனர். *(19)*

வறண்டுபோன நம்பிக்கைகளை சுமந்த அந்த சிறுவர்கள் புத்தாடை, பட்டாசுடன் வரும் இவர்களைப் பார்த்து புதுமலர்ச்சியுடன் புன்னகைத்தனர். *(12)*

சுகந்தனும், லதாவும் தம் குழந்தைகளோடு அந்த அன்னை இல்லத்தில் புத்தாண்டன்று சிறுவர்களுக்கு புத்தாடை, பட்டாசு, பட்சணம் கொடுத்து தங்கள் மகிழ்ச்சியை கொண்டாடினர். *(16)*

“என்ன சந்தோசம்தானே?” என்று முகமலர்ச்சியோடு கேட்டான் சுகந்தன். அதற்கு லதா

“மிக்க சந்தோசம். இந்த புத்தாண்டு பண்டிகையை நான் மறக்கவே மாட்டேன் என்று சொல்லி புன்னகைத்தாள்”. *(18)*



# ஆகா என்ன பொருத்தம்!

கே.எஸ்.சுதாகர்(அவுஸ்திரேலியா)

நான்கு பாத்திரங்கள்

*தந்தை (கிருஷ்ணா), தாய் (சாந்தி)*

*மகன் (பிரசாந்), பிரசாந்தின் காதலி (அபிநயா)*

காட்சி – 1

வீடும் வெளிப்புறமும்

*காலை*

*(பிரசாந்திற்கு 27 வயதாகின்றது. கட்டிளங்காளை. முகத்தில் வலை வேலைப்பாடுகள் கொண்ட கன்னக் கிருதா, மீசை. தினமும் மடிப்புக் கலையாமல் ஆடைகளை அயன் செய்து போடுவான். நகரத்தில் ஆர்க்கிட்டெக்காக வேலை பார்க்கின்றான்.)*

*கிருஷ்ணாவும் சாந்தியும் வீட்டிற்குள் இருந்து கதைக்கின்றார்கள். (க்ளோஸ் ஷாட் / close shot).*

*கிருஷ்ணா:* மகன் எங்கையோ வெளிக்கிடுறான்போல கிடக்கு. வெளியிலை மோட்டச்சைக்கிளைத் துடைச்சுக் கொண்டு நிக்கிறான். இனிச் சனிக்கிழமை வெளிக்கிட்டான் எண்டா வர பின்னேரமாகும்.

*சாந்தி:* போய் விசயத்தைச் சொல்லுங்கோ. காதும் காதும் வச்சது மாதிரி இருக்கட்டும். சத்தம் போட்டுக் கதையாதையுங்கோ.

*கிருஷ்ணா :* அவனிட்டைக் கேக்கிறதுக்கு முதல், உம்முடைய சினேகிதி மகாலச்சுமியோடை ஒருக்காக் கதையும்.

*சாந்தி:* மகாலச்சுமி ஒரு ஆளைத் தூது விட்டு என்னட்டைக் கேட்டதுக்குப் பிறகுதானே நான் இந்த விசயத்தையே தொடங்கிறன்.

*கிருஷ்ணா:* அட்றா சக்கை எண்டானாம்.

*சாந்தி:* அச்சாப் பிள்ளை மாதிரி பிரசாந்திட்டைப் போய் விசயத்தைக் கக்கி விடுங்கோ...

*கிருஷ்ணா :* அவன் நீ சொன்னாத்தான் கேப்பான். நான் வள் சுள் எண்டு கதைக்கிற பேர்வழி. நீயெண்டா பக்குவமாக் கதைப்பாய்.

*சாந்தி :* உங்களோடை நிண்டு மாரடிச்சா காரியத்துக்கு ஆகாது.

*( சாந்தி வீட்டுக்குள்ளிருந்து வெளியே போகின்றாள். சாந்தியுடன் கமரா வாசல் நோக்கி நகருகின்றது. dolly tracking shot. மகன் பிரசாந் மோட்டர்பைக்கைத் துடைத்தபடி வெளியே நிற்கின்றான். அவனிடம் கேட்பதா விடுவதா என்று சாந்தி தயங்குகின்றாள். dolly in.)*

*சாந்தி:* பிரசாந்... உன்னோடை ஒண்டு கதைக்க வேணும். உனக்கும் வயது வந்துட்டுது. இந்த ஆவணியோடை இருபத்தேழு முடியுது. கலியாணம் செய்து கொள்ளுற எண்ணம் ஒண்டும் இல்லையா?

*பிரசாந் :* ஏன் அம்மா அவசரப்படுகிறியள்? *(உதட்டிற்குள் சிரிக்கின்றான் பிரசாந்.) க்ளோசப் / close up பின்னர் க்ளோஸ் ஷாட் / close shot*

*அம்மா அவனையே பார்த்தபடி நின்றார்*

*பிரசாந் : ஏன் ஆரேனும் பெட்டையைப் பாத்து வைச்சிருக்கிறியளோ?*

*சாந்தி : உனக்கு என்ரை பிறண்ட் மகாலச்சுமியைத் தெரியுந்தானே! அவவுக்கு இரண்டு பெம்பிளப்பிள்ளையள். மூத்தவள் அபிநயா Jaffna யூனியிலை கொமேர்ஸ் டிகிரி செய்யிறாள். இந்த வருஷம் ஃபைனல் முடிக்கிறாள். அவளுக்கு இப்ப மாப்பிள்ளை தேடினம். அவளை உனக்குப் பேசலாம் எண்டு நானும் அப்பாவும் யோசிக்கிறம். உனக்கு அப்நயாவைத் தெரியும் தானே!*

*பிரசாந் : அம்மா... முதலிலை மரி பண்ணிற பிள்ளையை எனக்குப் பிடிக்க வேணும். என்னை அவவுக்குப் பிடிக்க வேணும். நாங்கள் இரண்டு பேரும் நீண்ட நாட்கள் வாழ வேண்டும்.*

*(அப்பா கிருஷ்ணா வாசலில் வந்து நின்று இவர்கள் இருவரும் பேசுவதைக் கேட்டுக்கொண்டு நிற்கின்றார். dolly tracking shot. dolly in.)*

*சாந்தி : நீ சின்னனிலை அவளோடை விளையாடியிருக்கின்றாய். பானை சட்டியளுக்கை சோறு கறி சமைச்சிருக்கிறாய். ஊஞ்சல் ஆடியிருக்கிறாய். உனக்கு அவளைத் தெரியும். உனக்கு அவளைப் பிடிக்கும்.*

*பிரசாந் : அது சின்னனிலதானே அம்மா. இப்ப எப்பிடி இருக்கிறாளோ? நான் அபிநயாவைக் கண்டே இப்ப ஏழெட்டு வருஷங்கள் இருக்கும். நான் கலியாணம் செய்யப்போற பெம்பிளையோடை கொஞ்சநாள் பழகிப் பாக்கவேணும் அம்மா.*

*கிருஷ்ணா : (கெக்கட்டம் விட்டுச் சிரிக்கின்றார். பிரசாந்தை நோக்கிப் போகின்றார். dolly tracking shot.) உனக்கு வரிச்சுமட்டை அடிதான் அவை தருவினம். (dolly in.)*

*பிரசாந் : அப்பா... நானே எனக்குரிய பெண்ணைத் தெரிவு செய்யுறன். என்னால முடியாட்டா உங்களிட்டைச் சொல்லிறன். இன்னுமொரு இரண்டு மூண்டு வருஷங்கள் எனக்குத் தாருங்கோ.*

*கிருஷ்ணா : நல்ல படிச்ச பிள்ளையள், வடிவான பிள்ளையள் எல்லாம் போயிடுவினம். பிறகு ஆறுதலா எண்டா உனக்கு வத்தல் சொச்சல் தான் வரும்.*

*(கிருஷ்ணாவும் சாந்தியும் ஒருவரையொருவர் பார்க்கின்றார்கள். பிரசாந் மோட்டச்சைக்கிளைத் தள்ளிக் கொண்டு புறப்படுகின்றான்)*

**காட்சி மாற்றம் – 2**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் / நகரம்**

*மதியம்*

*பிரசாந் : (தனக்குள் கதைத்தல்) அம்மா ஏதோ அபிநயா... Jaffna university எண்டு சொல்லுறா... நான் வேலை செய்யிற இடத்துக்குக் கிட்டத்தான் யூனியும் இருக்கு. ஒரு நடை எட்டி ஆளைப் போய்ப் பாத்தா நல்லா இருக்கும்.*

*(மதியம் போல் யூனியை நோக்கி தனது வேலை செய்யுமிடத்திலிருந்து நடக்கின்றான். கொமேர்ஸ் படிக்கும் சில ஆண்களிடம் அபிநயா பற்றி விசாரிக்கின்றான். அவர்கள் தூரத்தில் நின்றபடி அபிநயாவைக் காண்பிக்கின்றார்கள். ( பான்/ pan – கமராவினால் காட்சியைப் பெருக்கிக் காட்டல்)*

*பிரசாந் தினசரிப் பேப்பர் ஒன்றில் ஓட்டை போட்டு அதற்குள்ளால் அபிநயாவைப் பார்க்கின்றான்.)*

*பிரசாந்: (திரும்பவும் தனக்குள் கதைக்கின்றான்) சும்மா சொல்லக்கூடாது. அம்மா சொன்னமாதிரி, அபிநயா மூக்கும் முழியுமாக செக்கச் செவேல் எண்டுதான் இருக்கிறாள்.*

*(கிட்டப் போய்) என்னைத் தெரியுதா எண்டு பாருங்கோ...*

*அபிநயா: தெரியுமே! (பிரசாந்தை நிமிர்ந்து பார்த்தபடி வெட்கத்துடன் சொல்கின்றாள்)*

*பிரசாந் : என்னைப் பிடிச்சிருக்கா?*

*அபிநயா : என்ன? எல்லாரும் ஒரேயடியாகக் கிழம்பிவிட்டியள் போல கிடக்கு.*

*பிரசாந் : ஏன்.. ஏன் அப்படிக் கேட்கின்றீர்?*

*அபிநயா : போனகிழமை தான் அம்மாவும் கேட்டவா. உங்களைத் திருமணம் செய்ய விருப்பமா எண்டு..*

*(இரண்டு பேரும் சிரிக்கின்றார்கள்.)*

*பிரசாந் : முதலிலை நாங்க இரண்டு பேரும் பழகுவம். இரண்டு பேருக்கும் பிடிச்சுப் போச்செண்டா பிறகு அம்மா அப்பாட்டைப் போட்டுடைப்பம்.*

*அபிநயா : அதுதான் எனக்கும் சரியெண்டு படுகுது. படிப்பும் முடிய இன்னும் ஆறு மாதங்கள் இருக்கு.*

*பிரசாந் : அப்ப நாளைக்கு எங்கை சந்திப்பம்?*

*அபிநயா : எண்டாலும் நீங்கள் படு அவசரம் தான்.*

இருவரும் பழகத் தொடங்கினார்கள். ஒருவருக்கும் தெரியாமல் காதும் காதும் வைச்ச மாதிரி மோட்டச்சைக்கிளில் சுற்றுகின்றார்கள். கடற்கரை, பார்க், கோயில் என்று காதல்

செய்தார்கள். பிரசாந் ஒரு கூலிங் கிளாஸ் போட்டுக் கொண்டான். அபிநயா தலைக்கு ஒரு மொட்டாக்குப் போட்டுக் கொண்டாள். பிரசாந் அபிநயாவுக்கு மோட்டச்சைக்கிள் ஓடுவதன் நுணுக்கங்களைச் சொல்லிக் குடுத்தான். இருவரும் நிறைய விடயங்களைக் கற்றுக் கொண்டார்கள். தங்களையும் புரிந்து கொண்டார்கள். பிரசாந்திற்கு நினைத்ததை விட அபிநயாவை ரொம்பவும் பிடித்துப் போனது. அவளும் கொமேர்ஸ் படித்து பிரசாந்தையும் படித்துக் கொண்டாள். (ஃபேட் இன்/ fade in, ஃபேட் அவுட் / fade out காட்சிகள்)

**காட்சி மாற்றம் – 3**

**கடற்கரை**

*மாலை*

*அபிநயா :* நாங்கள் இரண்டு பேரும் பழகத் தொடங்கி இப்ப ஒரு வருஷமாப் போச்சு. இரண்டு பேருக்கும் ஒருத்தரை ஒருத்தர் பிடிச்சும் போச்சு. வீட்டிலையும் கலியாணம் பேசத் தொடங்கிட்டினம். இனி என்ன வீட்டிலை சொல்ல வேண்டியதுதான்.

*பிரசாந் :* உங்கடை குடும்பத்தாரும், எங்கடை குடும்பத்தாரும் தொடக்கி வைச்சினம். இப்ப நாங்கள் இரண்டு பேருமாச் சேந்து முடிச்சு வைக்கப் போறம்.

*அபிநயா :* இண்டைக்கு இரவு சாப்பாட்டு மேசையிலை நான் என்ரை அம்மா அப்பாட்டைச் சொல்லப் போறன். அதே மாதிரி நீங்களும் சொல்லுங்கோ. ஒரு ஒன்பது மணி மட்டிலை நீங்கள் எனக்கு ரெலிபோன் செய்யுறியள்.

*பிரசாந் :* ஏன் என்ரை அச்சாக்குஞ்சு நீர் ரெலிபோன் எடுக்க மாட்டீரோ?

**காட்சி மாற்றம் – 4**

**பிரசாந் வீடு**

*இரவு*

*(கிருஷ்ணா பேப்பர் படித்தபடி சாய்வனைக் கட்டிலில் இருக்கின்றார். சாந்தி குசினிக்குள் வேலையாக இருக்கின்றாள். அம்மாவைச் சுற்றி குழையக் குழைய வருகின்றான் பிரசாந்.)*

*சாந்தி :* என்னடா குட்டி போட்ட பூனை மாதிரி சுத்திச் சுத்தி வாறாய்...

*பிரசாந் :* அம்மா.... முந்தி ஒருநாள் அபிநயா எண்ட பிள்ளையைப் பற்றிக் கேட்டனீங்களல்லவோ? அவளுக்குக் கலியாணம் முடிஞ்சுதோ?

*(கிருஷ்ணா பேப்பருக்கு மேலால் குசினியை எட்டிப் பார்க்கின்றார்.)*

*சாந்தி :* எடப் போடா நீ... அவள் உனக்குச் சரிவராதடா மகனே! உங்கட இரண்டு பேரின்ரையும் சாதகங்களைப் பொருத்தம் பாத்தனாங்கள். துண்டறப் பொருத்தம் இல்லை எண்டு சாத்திரி சொல்லிப் போட்டார்.

*பிரசாந் :* எப்ப பாத்தனியள்?

*சாந்தி :* ஒரு வருசத்து முன்னை. உன்னைக் கேட்ட பிறகு பாத்தனாங்கள்.

*(கிருஷ்ணா உதட்டுக்குள் சிரிக்கின்றார். பிரசாந் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு தனது அறைக்குள் செல்கின்றான்.)*

*பிரசாந் :* கண்டறியாத சாத்திரமும் மண்ணாங்கட்டியும்..

*(கிருஷ்ணா சாந்தியிடம் கையால் சாடை மாடையாக என்னவென்று கேட்கின்றார்)*

**காட்சி மாற்றம் – 5**

**பிரசாந்தின் அறை**

*இரவு*

*(பிரசாந்தின் மொபைல் போன் அடிக்கின்றது.)*

*அபிநயா:* நீங்கள் அடிப்பியள் அடிப்பியள் எண்டு பாத்துக் கொண்டு இருந்தன். எல்லாமே புஸ் வாணமாப் போச்சு. இப்ப என்ன செய்யிறது?

*பிரசாந் :* விடியக் காலமை ஐஞ்சு மணிக்கு வீரபத்திரர் கோயிலடிக்கு வாரும்.

*அபிநயா :* என்ன சொல்லுறியள்?

*பிரசாந் :* சுரைக்காய்க்கு உப்பில்லை எண்டு சொல்லுறன். எங்கடை அம்மா அப்பாவை இனி உந்தச் சாத்திரத்தை ஒருக்காலும் விடமாட்டினம். நாங்கள் ஓடிப்போறதுதான் இதுக்கு ஒரே வழி.



பாவலர் கருமலைத்தமிழாழன்

# பெண்ணடிமை தகர்ப்போம்


அடுப்பறைகள் பெண்களுக்கே பட்டா வாக
அன்றெழுதி வைத்ததின்றும் மாற வில்லை
விடுமுறையே இல்லாமல் செய்ய வைத்த
வீட்டுவேலை விதிகளின்றும் மாற வில்லை !
உடுக்கின்ற உடைகளுக்கும் உரிமை யின்றி
உள்ளத்துள் குமுறுவதில் மாற்ற மில்லை
படுக்கையறை பொழுதன்றி வசைகள் பாட்டைப்
பகலெல்லாம் கேட்பதிலும் மாற்ற மில்லை !

படிக்கவன்று விடவில்லை பழைமை மாறிப்
படிப்பதற்கு வாய்ப்பளித்துப் படித்த பின்பும்
அடிமையென்னும் எண்ணமின்றும் மாற வில்லை
அவள்கருத்தை வீட்டிலாரும் கேட்ப தில்லை !
படித்துபட்டம் பெற்றுபணி ஆற்றும் போதும்
பலர்வணங்கும் பெரும்பதவி வகித்த போதும்
விடிவதற்குள் எழவேண்டும் கணவன் தூங்க
வீட்டிற்குள் பணியாளாய் உழைக்க வேண்டும் !

எதுவொன்றைச் சுயமாகச் செய்வ தற்கும்
எவ்வளவு படித்திருந்தும் உரிமை யில்லை
வதுவைக்குச் தட்சணையைக் கொடுப்ப தோடு
வருவோர்கால் விழுவதிலும் மாற்ற மில்லை !
இதுபோன்ற கொடுமைக்கு முற்றுப் புள்ளி
இடுவதற்கே ஆண்திமிரை அடக்க வேண்டும்
புதுமைப்பெண் பாரதியின் துணிவுப் பெண்ணாய்
பூவையர்கள் மாறினாலே மாறும் எல்லாம் !

**● க. புனிதன்**

# வயல் வாங்குதல்



வயலில்
சில கொக்குகள்
நீர் நிலை அருகில் தான்
இருக்கவேண்டும்

சில புற்கள்
மண் வளமாக தான்
இருக்க வேண்டும்

வேப்ப மரத்தில்
மரப் பல்லி
வனம் அருகில் தான்
இருக்க வேண்டும்

சில ஆடுகள்
மேய்ச்சல் நிலமாக தான்
இருக்க வேண்டும்

சில முயல் புழுக்கைகள்
நல்ல சகுனம்

சில புறாக்கள்
விதைக்கடலை காடு
அருகில் தான் இருக்க வேண்டும்

இப்போது எல்லாம்
இதுவெல்லாம் பார்ப்பது இல்லை
முக்கிய சாலையில் இருந்து
எவ்வளவு தூரம்
முக்கியமாய் நில சந்தைக்கு
பிரித்து போட்டு விற்க
ஆகுமா.

சா. கா. பாரதி ராஜா

# குடை

விரல் பட்டதும்
ஒரு மொட்டு
தலைகீழாக
இதழ் விரிக்கிறது

மழைத்துளி பட்டதும்
அங்குமிங்கும் பூக்கிறது
கருமை நிறப் பூக்கள்

இந்த
கருப்பு தான்
தாத்தாவின் கையிலிருந்து
மூன்றாம் காலாக...


வானம் ஒரு
குடை என்கிறாய் நீ
குடையும்
வானம் என்கிறேன் நான்
பகலில் பார்...
எத்தனை எத்தனை
வண்ண வண்ண
வானங்கள்

குடை
ஒரு சமத்துவப் போராளி
ஏழைக்கும்
வரவேற்க விரிக்கிறது
நிழல் கம்பளம்

இங்கே
எத்தனை எத்தனை
குடைகள்

குழந்தைக்கு குடையாகும்
அம்மாவின் முந்தானை

எறும்புக்கு குடையாகும்
சிதறிக் கிடக்கும் தானியங்கள்



பெருத்த மலைக்கும்
குடையாகிறது
மேகம்

சிறு சிறு உயிர்களுக்கு
குடையாகும்
சிறு புற்கள்

அட
இது என்ன...
வெட்கம் வந்தால் போதும்
முகத்திற்கு குடையாகிறது
சேரும் உள்ளங்கைகள்

கடும் மழையிலும்
புயலிலும்
இடர்களிலும்
காக்க நீள்கிறது
அன்பின் குடைகள்


# கி.கவியரசன் கவிதைகள்

எதை ஊற்றியும்
நிறையாத கோப்பைக்குள்
ஊற்றத் தொடங்கி விட்டேன்
கொஞ்சம் கொஞ்சமாக என்னையும்.....

வெள்ளை முடி தொடங்கும் போது
முகம் மறைந்து போகிறது
முடி தெரிகிறது.......

முகம் முழுக்க வெள்ளை முடி
வளர்ந்த பிறகு
முடி மறைந்து போகிறது
முகம் தெரிகிறது.....

விரல் நுனி வரை வந்து விட்ட
ஒரு கவிதைக்காக
தலைகவிழ்ந்து கிடக்கும்
எழுதுகோல் போல்
நீ இருக்கிறாய்
சொல்
எதுவரை வந்திருக்கிறேன் நான்



● ஐ.தர்மசிங், நாகர்கோவில்

# காட்சிப்பிழை

பட்டமரக்கிளைகள்
பசுமையாக இருக்கின்றன
அமர்ந்திருக்கும் கிளிகள்

தொலைதூரத்தில் பறவை
நெருங்க நெருங்க
தெளிவாகிறது வானூர்தி

விலகி இருப்பது வரை
மென் புன்னகையும் அழகுதான்
தேன் குரலும் அழகுதான்
வாள் மீசையும் அழகுதான்
தடந்தோளும் அழகுதான்

பார்வையில் விழுவதெல்லாம்
நெருங்கும் வரை
காட்சிப்பிழை தான்.



● வட்டக்கச்சி வினோத்

பாதை மாறியது கூடத் தெரியாமல்
பரபரப்பாக ஓடிக்கொண்டே இருக்கிறோம்

இனத்தின் புதைகுழிகள் மூடி மறைக்கப்பட்ட
இடத்தைக் காணாமல்

உலகே அழுத எங்கள் சோகம் தெரியாமல்


யாரோ வரைந்து செல்லும் வழியே
எல்லாவற்றையும் மறந்ததாக
நினைத்துக்கொண்டு ஓடுகிறோம்
அனைத்தையும் சுமந்துகொண்டே

அங்கே பாருங்கள் அது போலியான
பெயர்ப் பலகைகள்
அது நடப்பட்ட இடத்திலிருந்து குருதி வழிகிறது
உங்களையும் அதை நோக்கியே அழைத்துச்
செல்கிறது

எங்கள் விடுதலை தேடிய
அறவழிப் பாதை அதோ தெரிகிறதே
எந்தக் குறுக்கு வழியும் இல்லாது
தியானம் மட்டுமே நிறைந்திருக்கிறது
நிச்சயமாக எம்மை
நல்ல திசை நோக்கி அழைத்துச் செல்லும்
வாருங்கள்

● மு.முபாரக்

கடித்த
நாய்க்குட்டியை
காயப்படுத்துவதற்கு
எத்தனையோ காரணங்கள் இருக்கின்றன...,
மன்னிப்பதற்கு
ஒரே காரணம்
மட்டுமேயிருக்கிறது..
என்னைப் போலவே
அதற்கும்
ஒட்டிப்போன வயிறு !



# பிரியாணி

● இரா. மதிராஜ்

“யப்பா நாளைக்குப் பொன்னங்காளி வலசு சர்ச் இல்ல தோத்திரப் பண்டிகையாம்,

காலையிலேயே தவபுத்திரன் அண்ணாச்சி வந்து அழைப்புக் கொடுத்து போனருங்கப் பா”

என ராஜாவின் மனைவிச் சொன்னதும் ராஜாவுக்கு சந்தோசம் தாங்க முடியவில்லை,

ச்ச, நாளைக்கு வேற ஞாயிற்றுக் கிழமை,

மேலாளர் வேற நேற்றே நம்மிடம் அவர் லீவுன்னுச் சொல்லி விட்டார்,

நம்ம லீவு எடுக்க முடியாது,

போன வருஷம் நமக்கேத் தெரியாமல்

தோத்திரப் பண்டிகை முடிச்சு போச்சு,

அதுல வேற போன வருஷம் பிரியாணி சாப்பிடவே ஆள் இல்லாம மீதி ஆச்சுன்னு வேற தவபுத்திரன் அண்ணன் வேற வருத்தப்பட்டார், அதனால தான் இந்த வருஷம் பண்டிகைக்கு மறக்கமா எனக்குச் சொல்லிருணான்னா ன்னு சொன்னதுக்கு அவரு நம்மளைக் கூப்பிட்டு இருக்காருன்னு பல விதமான சிந்தனைகள் பிரியாணியை நோக்கி ஓடினாலும்

“சரி மா, நீயும், சின்னவனும் நடந்தே பொன்னங்காளி வலசு சர்ச்க்கு ஜெபத்துக்கு காலையிலேயே போயிருங்க, காங்கேயம் சர்ச்க்குப் போக வேண்டாம்,

வேற யாராவது வராங்கனாலும் கூட்டிட்டு வந்துரு, நான் நாளைக்கு வேலைக்கு மில்லுக்கு போகணும், வேணா ஒன்னு செய்யிறன், மத்தியான சாப்பாடுக்கு சர்ச்க்கு வந்துரன்,

நல்ல வேலை மனைவி எல்லா நாளும் சாப்பாடுக்கு தானே சர்ச்க்கு வரிங்களா, ஜெபத்துக்கு என்னைக்கு வர்ரீங்கன்னு கேட்பன்னு ஒரு பயம் இருந்தது,

அவள் ஒன்றும் சொல்லவில்லை,

சரி நம்ம நாளைக்கு சர்ச்க்கு சாப்பிடப் போகும் போது யாரைக் கூப்பிட்டுப் போகலாம்,

இரண்டு வருசத்துக்கு முன்னால அதே சர்ச் பிரதிஷ்டைப் பண்டிக்க்கு, உடன் பணிபுரியும் வேலுசாமி அண்ணன், செந்தில் அண்ணன், குருசாமி அண்ணன் ஆகியவர்களை அழைத்துக் கொண்டுப் போய் மட்டன் பிரியாணி சாப்பிட்டான் ராஜாவும்,

அப்போ பாரதியை வரச் சொல்லிட்டு அழைசிட்டுப் போகாம விட்டுட்டான் ராஜா,

அது இந்த இரண்டு வருடமா ராஜாவை உருத்திட்டே இருந்தது

அதுக்குப் பரிகாரமா நாளைக்கு நடக்கப் போற ஸ்தோத்திரப் பண்டிகைக்கு எப்படியாவது பாரதியை

மட்டுமாவதுக் கூட்டிட்டுப் போய் மட்டனோ, சிக்கனோ ஒரு கைப் பாத்திரமான்னுக் கனவுக் கோட்டை க் கட்டிக் கொண்டிருந்தான்,

" தல நாளைக்கு எங்கயும் போயிராதீங்க'

"என்ன சார் விஷயம்"

" நாளைக்கு மத்தியானம் சாப்பாட்டுக்கு வந்து சர்ச் ப்ரோக்ராம் இருக்காங்க, அங்கப் போயிடலாம்"

" சரி சார் கண்டிப்பா போயிரலாம் சார் "

ராஜாவும் பாரதியும் மத்தியான சாப்பாட்டுக்கு போகப் பிளான் பண்ணிட்டாங்க

ராஜாவின் மனைவி அலைபேசியில்

"யப்பா கிளம்பிட்டீங்களா "

"இல்லை இன்னும் கிளம்பல சொல்லுமா "

"...."

"என்ன இது நேராயிட்டா "

"இல்ல இப்பதான் ஜெபம் நடந்துட்டு இருக்கு "

இப்பமே மணி இரண்டு ஆயிட்டு

எப்படியோ அழுத்தி பிடித்து இருசக்கர வாகனத்தில் பத்து கிலோமீட்டர் போறோம்

அங்க சாப்பாடு யாரும் சாப்பிட்ட மாதிரி தெரியல

அங்க போதகர் தேவனுடைய செய்தியை கொடுத்துட்டு இருக்காரு

ஒரே ஒரு சேர் மட்டும் காலியாக் கிடந்த்து நாங்கள் வெளியே நின்று கொண்டிருக்கிறோம்

"பாரதி வாங்க ஒரு இடம் காலியா கிடக்கு போய் பார்க்கலாம் "

" ஐயா வாங்க தோத்திரம் தோத்திரம் "

இதோ பாரதி

" நம்ம லேட்டா வந்தது நல்லதா போச்சு ங்க "

" இங்க பாரு இன்னும் வந்து சாப்பாடு போட ஆரம்பிக்கல "

"....."

எப்படியோ தேவனுடைய வார்த்தையை வந்து போதகர் கொடுத்து முடிக்கிறார்

பொருட்கள் ஏலம் நடந்துட்டு இருக்கு

பீர்க்கங்காய் சுரைக்காய் பாசிப்பயிறு

எல்லா ஆயிரம் ரூபாய்க்கு மேல

ஏலத்தில் போயிட்டு இருக்கு

ராம்ராஜ் காட்டன் வேஷ்டி உடனே

500 ரூபாய்க்கு அது ஒரு அண்ணன் வாங்கிட்டாரு

அப்படி இப்படியுமா எல்லா )பொருட்களும் ஏலம் போய் முடித்த பிறகு

ஒரு சிப்பா அரிசி மட்டும் கடைசி ஏலத்துக்கு வந்துச்சு,

அதுவும் பொன்னி அரிசி

26 கிலோ என்று நினைக்கிறேன்

ஸ்டார்ட்டிங் ரேட் ரூபாய் இரண்டாயிரம் ன்னு ஆரம்பிச்சாங்க,

ராஜா கம்முனு இல்லாம நாலாயிரம் ன்னு சொன்னான்

அந்த சபை மக்கள் எல்லாம் என்ன நினைச்சாங்கன்னு தெரியல

யார் அரசியை உட்ற மாதிரி தெரியல

5000,6000,7000

என ஒரு சிப்பம் அரிசி கடைசில 9,500 ரூபாய்க்கு போச்சு,

ஒரே ஒரு தடவை ராஜா நாலாயிரம் என்று சொன்னதோட சரி

அவன் கணக்குக்கு இந்த அரிசி 10,000 க்கு மேல போனால் தன்னால் வாங்க முடியாது என தெரியும்,

அப்ப பார்த்து பாரதி

" ஏன் சார் நீங்க

அவங்களாவது கம்மியான ரேட்டுக்கு வாங்கி இருப்பாங்க

நீயே கம்முனு இல்லாம ஒரே டைம்ல இப்படி ஏத்தி விட்டுட்டீங்க "

. ".."

' நீங்களும் வாங்க மாட்டீங்க

விலையையும் ஏத்தி விட்டுட்டீங்க "

அப்படின்னு சிரிச்சிட்டே சொன்னான்

"இல்ல பாரதி நான் வாங்குனது தான் நினைச்சேன் நம்ம கையை மீறிட்டு "

அப்படின்னு ராஜா சொன்னான்

ராஜாக்கு நல்லா தெரியும் எந்த ஏலத்திலும் எதுவும் வாங்க மாட்டான் ன்னு சொல்லி,

ஆனா வாய மூடிட்டு கம்முனு இருக்கவும் மாட்டான்

நம்மள நாலு பேர் கவனிக்கனும் அப்படின்னு ஏலத்துல வந்து ஏலம் கேட்டுட்டு இருப்பான்,

சரி எப்படியோ ஏலம் எல்லாம் முடிஞ்சு சாப்பாடு பரிமாறுனாங்க,

சுட ச் சுட பிரியாணி

அதுவும் திருப்பூர் பேமஸ் சிக்கன் பிரியாணி தான்,

பாரதியும், ராஜாவும் ஆளுக்கு ஒரு பிளேட் வாங்கி

சர்ச்சுக்கு பக்கத்துல இருக்க மாட்டு தொழுவத்தில் போய் நின்னுகொண்டே ச் சாப்பிட ஆரம்பிச்சாங்க

"கன்ஃபார்மா இது

திருப்பூர் சிடிசி பக்கத்துல இருக்குற

அந்த மூன்றெழுத்து பேமஸ் பிரியாணிக் கடை டேஸ்ட் தான் பாரதி "

பாரதி அவன் பாட்டுல சாப்பிட்டுட்டு இருந்தான்,

"பாரதி நீங்க கூச்சப்படாதீங்க

எது வேணாலும் கேளுங்க "

ரெண்டு பேருமே பர்ஸ்ட் ரவுண்டு முடிஞ்சப் பிறகு,

அடுத்து ஒயிட் ரைஸ்க்கு போறதா ?பிரியாணிக்கு போறதா? என்று யோசிச்சிட்டு இருக்கும் போது

ராஜா சொல்றான்

"கன்ஃபார்மா பாரதி இரண்டாவது பிளேட்டும் பிரியாணி தான் வாங்கணும்

கன்பார்ம் பாரதி "

பாரதி " அப்படியே பண்ணிரலாம் அப்படிங்கிற மாதிரி கண்ணாலேயே சொல்றான்,

ரெண்டு பேரும் திரும்பவும் இரண்டாவது பிளேட்டுக்கு சிக்கன் பிரியாணி வாங்கி சாப்பிட்டாங்க

இரண்டாவது பிளேட் பிரியாணி வாங்கி சாப்பிட்டு இருக்கும்போது ராஜா..

"தல அவசரப்படாதீங்க

ஒயிட் ரைஸ் இருக்குது சாம்பார் இருக்குது, ரசம் இருக்குது, மோர் இருக்குது,

சத்தியமா இது எல்லாத்தையும் நம்மால் சாப்பிட முடியாது

ஆனா நான் ஒரு சின்ன ஐடியா சொல்றேன்

அப்படின்னு ராஜா

கொஞ்சோண்டு ஒயிட் ரைஸ்ல ரசம் மட்டும் வாங்கி சாப்பிடாங்க

அதுக்கு பிறகு லேசா மோர் வாங்கி சாப்பிட்டாங்க,

அப்படியே சாப்பிட்டு இருக்கும் போது,

தவப்புத்திரன் ஐயா வந்தாரு

"ஐயா தோத்திரம் ஐயா "

ராஜா ஒரு தோத்திரம் போட்டான்

" நல்லா சாப்பிட்டீங்களா "அப்படின்னு கேட்டாரு

"ரொம்ப சூப்பர் போங்க"

அப்படின்னு ராஜா சந்தோஷமா சொன்னான்,

" நல்ல வயிறார சாப்பிட்டு தான் போனும்" அப்படின்னு அண்ணாச்சி சொன்னாரு

" பாரதி

இந்த பிரியாணிக்கு நிறைய பேர கூப்பிடனும்னு ஆசைப்பட்டேன்

ஆனா என்னால முடியல

கண்டிப்பா இது எல்லாரும் சாப்பிடுற மாதிரி ஒரு நாள் நம்ம பண்ணனும் அப்படின்னு சொன்னான் ராஜா"

சாப்பிட்டு திருப்பி மில்லுக்குள் வரும் போது

"எங்க போயிட்டு வரீங்கன்னு? "

கேட்கும் உடன் பணிபுரியும் மாணிக்கத்திடம்

மனதிற்குள் கேட்டான்

விட்டு விட்டு போய் பிரியாணி சாப்பிட்டதற்காய் ஒரு பாவ மன்னிப்பு.

❍

● கவிஞர்.இரா.சீ.பாலகுமார்.M.A.,

# காளையை அடக்கு கன்னியை மடக்கு

துள்ளிவரும் காளையின்வேகம் குறைக்கிறான்
வீரமண்ணில் பிறந்தவனிவேனோ காளையன்
மீசைத்துடிப்பில் வீரமும் செழிக்கவேப்பெற்றான்
உடல்வாகினில் துரியோதனனன் போலிருப்பான்.(4)

பார்வையில் வீரம் வீறிட்டபடி அடக்கிடுவான்
வாடிவாசலில் காளையின் திமிரினை ஒடுக்கிடுவான்
வீரத்தைக் காட்டியேப் பரிசுகளும் வென்றிடுவான்
உயிரைப் பணயம் வைத்து உருண்டுவெல்வான்.(8)

வீரமாய் மண்ணைத் தொட்டு வணங்குவான்
காளையொடு மோதி தரையில் விழச்செய்வான்
காளைகளைத் தன்வசப்படுத்திடுவானிவன்
கன்னியின் கடைக்கண்கள்இவனைப்பார்த்திடும்.(12)

காதலுடன் மின்னலாய்ப் பாய்ந்து மடக்கிடுவான்
தங்கக்காசுகள் மாலைகள் பரிசுகளாக வந்திடும்
பாவையர்களின்குத்தாட்டம் இங்கே மேலோங்கிடும்
வெற்றி வாகையினைச் சூடியே மகிந்திருப்பான்.(16)

❍


---

● நேசன் மகதி

# தகப்பன் சாமி

கைகளுக்குள்ளே
இருந்துவிட்டு
மேல்வகுப்பிற்காக
பள்ளியைவிட்டு
மாணவர்கள் விலகும் தருணங்களில்
மகளைத் திருமணம் செய்துகொடுக்கும் நாளில்
ஒரு அப்பாவின் கண்களில் ஊற்றெடுக்கும்
கண்ணீரை ஒத்ததுதான்
ஆசிரியனின் வலியும்...

❍



ஆ.தமிழரசி, வேலூர்

# எழுந்து வா எழுத்தாலே

மாத்திரைக்கொண்ட எழுத்து
மருந்தாகி
வலுவாகி

சிங்காரமா வீற்றிடுமாம் உயிர்மெய் உடலுக்கு

வாள்போன்ற சொற்கள் தயக்கமின்றி தந்தாலே

தரணி போற்றும் சாகசத்தால் உயர்வாயே

ஆற்றல் தரும்! எழுத்தெல்லாம் அடிமைகொண்ட
மனிதருக்கு

தடுமாறும் பயத்தை தகர்த்தெறியும்
கருவியாம்

சிந்தனை தூண்டும் உன்னெழுத்து வெற்றிக்கு

வித்தாகும் வித்தையாம்
பாசநேசத்தை பகிர்ந்து இழுக்கும்

எழில்கொண்ட ஆயுதமாம்
பண்பான எழுத்து

தத்துவ
எழுத்தாலே
பொறுமைதரும்
சாவியே

சாதனைகொண்ட எழுத்தாலே
சரித்திரபடைக்கும் கருவியே..

தடுமாறும்
புத்திக்கு
மயக்கத்தை அறுத்திடம்

தந்திர புத்தி மந்திரக்கோல் எழுத்தாளே

எழுச்சிகொண்ட எழுத்தெல்லாம்
மனநோய்க்கு மருந்தாகும்

ஆகச்சிறந்த எழுத்தெல்லாம் அறிவுதேடலில்
சொத்தாகும்

சீர்தூக்கி நிறுத்துகின்ற சீர்திருத்த எழுத்துக்களாம்

தரமான
எழுத்தெல்லாம்
நம்பிக்கை கொடுத்தே

சாகத்துணியும்
உயிர்க்கெல்லாம்
தன்நம்பிக்கை தந்தே

சாகசம் புரியுமே சங்கதியுள்ள எழுத்தாம்

முத்தமிழ்
வித்தகரல்லாம்
விண்ணை தொட்டதும்

கல்விபுரட்சிக்கு ஏற்றமிகு வித்தாகும்
எழுத்துப்புரட்சி

நாற்புறச்சாலை
வழிசொல்லும் வியத்தகு ஆயுதமாம்

ஆணித்தர எழுத்தாலே
அவனி சிறக்க

அற்புத
சக்தியாய்
எழுந்து வா.

● இனியவன் காளிதாஸ்

இக்கரையிலிருந்து அக்கரை தெரியாத

இந்த ஆத்தங்கரையிலதான் நம்ம முன்னோர்
குலதெய்வத்துக்கு பொங்கலிடுவார்களெனக்
கதைசொல்வாள் பாட்டி...

ஏரோட்டி முடித்து காளைகளுக்கு நீர்காட்டுகையில்
காளைகளே முங்கிரும் அளவுக்கு நீரோடும் ஆறு
எனத் தன் இளவயதுக் கதைசொல்வார் தாத்தா...

இடுப்பளவு நீரிலிறங்கி மீன்பிடித்த தன்
விடலைப்பருவக் கதைகளைச் சொல்லிச்
சிலாகிப்பார் அப்பா...

மழைபெய்யாத நாட்களில் மட்டைப்பந்து
மைதானமான ஆற்றை பால்யகாலத்தில் நானும்
பார்த்திருக்கிறேன்...

ஆறிருந்த இடத்தில் கட்டிய அடுக்குமாடிக்
குடியிருப்பில் வளரும் தொட்டிமீன்களை
இரையிட்டபடியே இரசிக்கிறான் மகன் இப்போது...

பாவம் மனிதர்களின்
பெரும்பசிக்கு இரையாகிப்போன ஆற்றைத்தேடி
அங்குமிங்கும் அலைந்துகொண்டிருக்கின்றன
தொட்டிக்குள்
ஆற்று மீன்கள்.

● ரகுநாத் வ, மதுரை

# உடைந்த கரப்பான் காலிற்கான பெரும்யுத்தம்

நுணலெழுப்பும் ஓலங்களால்
உறக்கத்திலிருக்கும்
அரவங்கள் நெளிகின்றன


உணவிற்காக ஒன்றும்
உயிர்பிழைக்க ஒன்றுமென
சிந்தையிலிருக்கின்றன
கவுளியும் கரப்பானும்


உடைந்த கரப்பான் காலிற்காக
பெரும் யுத்தமொன்றை
நிகழ்த்திக்கொண்டிருக்கின்றன
சிற்றெறும்புகள்

உணவகத்தின் ஷட்டரை
இழுத்துத் தாழிடுகையில்
யாசகரின் செவியில்
அறைகூவலிடுகிறது கடைசி வாய்ப்பு

கூடுதல் இட்லிக்கு காசில்லாததால்
நிறையாமல் மூடுகிறது
இயலாதவரின் இரவு வயிறு

காணுமிடமெங்கும்
தலைவிரிகோலமாய்
திரிந்து கொண்டிருக்கிறது பசி.





● ரஜிதா அரிச்சந்திரன்

வண்ணம் குழைத்து அப்பிய காகிதம்...
காற்றில் சருகாய் கணமும் அலைந்துலைந்து
ஆற்றில் அடித்து கடத்தப் படும்சருகாய்
வாழ்வியலில் நித்தம் வரண்ட நிலமாக
ஏழ்மைவிலங் கின்பிணைப்பில் நான்

இருந்தவேளை வந்தாயே நீவசந்த மாக
கருகிய நானும் கடலாக மாறி
புத்தம் புதுதென்றல் பூவாசம் தந்திட
அத்தன் புகழ்பாடி னேன்

மகிழ்ந்தநீ மன்னன் மனுநீதி போலே
தகிக்கும் வெயிலில் தத்தளித்த மீனென்னை
காதலித்து காத்து கடுகாயி ருந்தஎன்னை
ஆதரித்து ஏற்றிட வே

வர்ணம் குழைத்து வடிவாய் வரைந்ததாளாய்
நர்த்தனத்தில் பாவமாய் நல்லன பெற்றே
அவனிமீதில் அன்பு மழையில் நனைந்தே
நவமணிமாய் மாறினேன் நான்.

● இளையவன் சிவா

# காலம் தரும் அனுபவம்

தேர்வெழுதாது தினமும்
அனுபவத்தைக் கற்றுத்தரும் வாழ்வில்
நகர்வுகளைக் கணக்கிடாது
திறமைகளை அனுமானியுங்கள்
இயங்கும் செயலில்
தொய்வுகள் நேரிடின்
இடரென நினைத்து
தீர்வுகளைத் தேடுங்கள்
குறைகளும் குழப்பங்களும்
பாதையில் கும்மியடிக்கையில்
நிறைவான மனதோடு சிந்தனையில் ஒன்றிணைந்தால்
தோல்விகளுக்குள்ளும் தென்படலாம்
வினைக்கான விடைகள்.
உறவிலோ நட்பிலோ
விழுந்திடும் விரிசலில்
உனக்கான செயல்களில்
நேர்மையும் நிறைவும் வைத்திடின்
கசந்திடும் தருணத்திலும்
காத்திடும் அனுபவம்.
சினத்திலும் சிதறப்படும் சொற்களிலும்
மனத்தினை சமன்படுத்தி
மயங்காது தொடர்ந்திடின்
கிடைத்திடும் யாவும்
பயனாகிடும் அனுபவங்களாகும்.

# மைத்திரி அன்பு கவிதைகள்

**வழக்கம் போல்...**

காத்திருப்புகள் காணவில்லை
தனிமை துரத்தும் வெளியிடம் நோக்கி
வந்தமரும் என்னிடம்
ஏதேதோ எதிர்ப்பார்ப்புகள்
சதாகிக்கின்றன.

எதிர்ப்பார்ப்பின்றி
யார் யாருக்காகவோ காத்திருந்தவர்கள்
கண்டடைதலினூடே கரம் சேர்கின்றனர்

தொட்டு - தொடர்ந்து
கொண்டாடும் குதூகலிப்புடன்
விளையாட்டாய்
அறிமுகமில்லாதவர்களின் 'அன்பாதல்'
என்னோடு அமர்ந்திருந்தவர்களை
என்னிலிருந்து அப்புறப்படுத்த....

அப்பொழுதும் உணர்கிறேன்
வரப்பெறாத எனதெதிர்ப்பார்ப்பு
தனிமை தவமென...

யாரோடும் பேசாமல்
என்னைப் போலவே
என்னத்தனை சொற்களும் மௌனிக்க..

முகமலர்ந்து – மூர்ச்சையாகி
காத்திருத்தலினூடே
காணாமல் போகிறேன்
நான்.



அன்பைச் சொரிய வார்த்தைகள் ஏதுமின்றி
உண்மைக்கும் உணர்வுக்குமான
மெல்லிய நுண்புலக் காட்சிகள்
வாழ்தலின் ஈடேறா மிச்சங்களாய்
அவதானிக்கின்றன.

மழைமுகமொன்று
ஒளி பொருந்திய தீட்சண்யத்துடன்
முகமூடி ஏதுமற்று
போலிமைகளின் வேடம் கலைத்து
சுய பிரகாசத்துடன்
சிரிக்க சிரிக்க மரணிக்கிறது.

தரிசிக்கத் தூண்டும்
அதனீர்ப்பு -
பெருங்கோட்டோவியமாய்
அற்ப சுகங்களின் அடையாளங்களை
அடைக்காக்காமல்
உணர்வுகளை அறுத்தெறிந்து,
அன்பால் வாழும்
மனித வாஞ்சைகளில் கரைந்து
பிரிவடர்ந்த கண்ணீரென
கடல் சேர்கிறது.


எதிர்பாரா
கரையுடைப்பையும் கரைபுரல்வையும்
எதிர்நோக்கலாமினி!


● இரா.வெங்கடேஸ் குமார்

# வாழ்கையின் விடையே நிகழ்வின் வினாவில்?

முகவரி தேடிடும் நாடோடி போல் தான்
முதல் பாதம் தொட்ட மனிதன் நிலையாவான்
விழி கண்டிடும் காட்சிகள் அனைத்தும் கேள்வியாய் மனதில்
இதழ் பேசிடும் மொழிகள் அனைத்தும் கேள்வியோடு பிறக்க
தேவைகள் கொண்டு தேடிடும் மனம் கேள்வியோடு மட்டும்
உடலில் உயிர் தொட்டதும் நித்தம் கேள்வி தான்
நிதம் உயிர் உடல் விட்டு உதிர்வதும் கேள்வி தான்
புரிந்திடும் பருவம் விடை தேடும் வினா முழுதிற்கும்
விடைகள் மனதை குளிர்த்திடுமா என தேடுகையில்
விடைகளில் வினா தேடிடும் முழுமையடைய மனதும்
முகர்ந்திடும் வாசம் கண்டால் விடை மலரிடம் என்றும்
மலரிடம் வாசம் எப்படி என்ற வினாவும் உடன் தோன்றும்
உலன்றிடும் மனமும், உரைந்திடும் நீரும் பருவம் மாற
உருவம் மாறிடும் மாற்றம் மாய புகை தானே
மனம் கொண்ட நிலை மாறும் விடை தோன்ற
நினைவுகள் தேக்கும் மூளை மட்டும் வினாக்கள் தேடும்
புவி நுழைவில் நடை பழகும் பருவம் முதல்
முதிர்வில் துணை கொண்டு நடை முடியும் வரை
விடை அறிய மனம் விடாமல் வான் வரை கூட பறந்திடும்
நிலை இன்றி மனிதன் விடாமல் தேடிடும்
விடைகள் எல்லாம் உடன் வினாக்கள் தேடிடும்
இயல்பாய் வினாவிடும் கேள்விகள் முதல்
வியந்து ஆராய்ந்து வினாவிடும் கேள்விகள் வரை
விடை தோன்றிட வினாக்களும் விழைந்திடும்
வினாக்கள் எனும் விதை விதைக்க விடை எனும் கனி பிறக்க
கனியின் உள்ளே விதை எனும் வினாவும் உடன் தோன்றும்
வினா தோன்றாத விடை எல்லாம்
விதை இல்லாத கனிகள் போல அதனோடு முடிந்திடும்
விடையோடு தோன்றிடும் வினாவை வினாவிடும் நேரம்
முடிவுகள் இல்லா வாழ்க்கையும் உடன் நேரிடும்
நல்ல அறிவோடு சேர்ந்த மனிதர்களால் நிரப்பி
நூலகம் நிரப்பிடும் அத்தனை வலியது வினாக்கள்.

❍


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஆவணி - 2022


கார்த்திகை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
கவிதைச் சிறப்பிதழ்



மாசி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
புரட்டாசி : 2024

# முந்தைய இதழ்கள்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
பங்குனி - 2024
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ்


காற்றுவெளி
ஆடி - 2024
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மார்கழி - 2023
சொக்கன் சிறப்பிதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
தை - 2023